# செபிக்கின்ற தாயார்
# புனித எவுபிராசியா



ஜெபிக்கின்ற தாயார்

# புனித எவுபிராசியம்மா

## அணிந்துரை

கொள்கைகள் உலகை ஆள்கின்றன. அவைகள் உண்மையில் வேரூன்றினவைகளென்றால் வாழ்க்கை நன்மையின் வழியே முன்னேறும். உயரிய கொள்கைகளாலும் தூய நடத்தையினாலும் ஒளி வீசும் எண்ணற்ற வாழ்க்கைகள் நமக்கு ஒளிபகரும் விளக்குகளென இம்மையின் வழி யோரங்களில் நட்டு வைக்கப்பட்டுள்ளன. அவர்களை நாம் சான்றோர் களென்றும், புனிதர்களென்றும் வணங்குகிறோம். கால வெள்ளத்தால் தரை மட்டமாக்கப்படாமல் வரலாற்றில் அவர்கள் தலையோங்கி நிற்கின்றனர். நன்மையின் பல்வேறு வடிவங்களை எடுத்துக்காட்டி நிலைகொள்ளும் அவர்கள் என்றும் நமக்கு வழிகாட்டிகளாக அமைகின்றனர். அவ் ஆத்துமாக்களின் வரலாறுகள் மீண்டும் மீண்டும் மகாத்துமாக்களை உருவாக்குகின்றன எனலாம். அதற்கு முதற் தேவை அவர்களைப் பற்றின அறிவு, உண்மை அறிவு ஊக்கமளிக்க வல்லது. அதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு புனித எவுபிராசியம்மாளின் இந்த வரலாறு.

புதைந்த முத்துப்போல் மறைவிலிருந்து ஒளிவீசிய ஒரு எளிய கன்னிகை இந்த வரலாற்று நாயகி. அப்புனித வாழ்வின் பொற்கதிர்கள் நாளடைவில் மறையின் திரைகளை உடைத்து வெளியில் ஒளி வீசத் தொடங்கியுள்ளன. அந்த ஒளியின் பக்கம் பிறரும் ஈர்க்கப்படத் தூண்டுவதே இந்நூலின் நோக்கம். பேறு பெற்ற அந்த வாழ்க்கை யிலிருந்து ஆசிரியர் தாமே முதலில் ஒளி பெற்றுள்ளார் என்பதற்கு இந் நூலின் ஒவ்வொரு பக்கமும் சான்று பகருகின்றது. அதன் நன்றி பயனாக உருவெடுத்ததே இச்சிறு நூல் என்பதும் பொருந்தும்.



இறை பராமாக்கையின் குறுக்கிடுதலை இம்முயற்சியில் நான் காண்கிறேன். புனிதையின் மறைந்த வாழ்க்கையின் இனிய வருவுலங்களை இந்நூல் வழி பகிர்ந்தளிப்பது மறைந்த மௌன வாழ்க்கையை உடமையாக்கியுள்ள கரங்களே. கவனிக்கத் தக்க மற்றொரு தொடர்பும் இங்கே காணக் கிடைக்கிறது. ஈன்ற தாயைப் போல் தேவத்தாயை தாமே நம்பி அன்பு செய்து, பிறரும் அவ்வாறு அன்பு செய்யத் தூண்டி வந்த இந்த எளிய கன்னிமையின் வரலாற்றை வரைந்து காட்டுபவர் மரியன்னையின் புகழுக்காக நிலைகொள்ளும் செபமாலைமாதா துறவறச் சபையின் ஓர் அங்கத்தவர். இளமை யிலிருந்தே அச்சிறு கரங்களில் செபமாலை தவழத் தொடங்கியது. வார்த்தைகள் உச்சரிக்கப் பழகின நாள் முதற்கொண்டு அருள் நிறைந்த மரியே வாழ்க என்னும் வார்த்தைகள் அந்த உதடுகளிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்தன. 1952 ஆகஸ்ட் திங்கள் 29ம் நாள் அக்கரங்களும் உதடுகளும் அசைவற்றுப் போகும் வரையிலும் அவ்வாறு தொடர்ந்துக் கொண்டேயிருந்தது. இத்தாய் சேய் உறவு ஒரு மரியன்னைப் பக்தனின் வார்த்தைகளில் உயிர் பெறக் காண்பது விரும்பத்தக்கது. வாசகர்களிடமும் இந்த உயிர் உயர்வு தடையின்றி ஒழுகி வர ஒவ்வொரு வார்த்தையும் உதவுவதாக, ஆசிரியருக்கு எமது இதயபூர்வமான பாராட்டுகள்.

கேரளாவில் திருச்சூர் மறைமாவட்டத்தில் கார்மேல் அன்னையின் சபையின் ஒரு எளிய அங்கத்தினர் புனித எவுப்பிராசியம்மாள். செபத்திலும் தவத்திலும் ஊன்றி நின்ற அந்த அர்ப்பண வாழ்க்கை ஆரம்பமானது 1897ல் அவரது 20வது வயதில், ஐம்பத்தைந்து ஆண்டுகள் அது நீடித்தது. அவற்றுள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஒல்லூர் புனித மரியன்னையின் மடத்தில் செலவழித்தார், அவரது பூத உடலும் அங்கேயே துயில் கொள்கிறது.

எண்ணற்ற இடையூறுகளை மேற்கொண்ட பிறகு தான் அந்த வீர கன்னிகை மடம் புக முடிந்தது. அதற்குள் அந்த இளங்கன்னிகை செபத்திலும் தவத்திலும் ஊன்றின உறுதியான ஞானவாழ்வில் வேரூன்றியிருந்தாள். துறவறத்தில் அது இன்னமும் ஆழமடைந்தது. இணையற்ற இறையன்பும் பிறருக்காகத் தன்னையே செலவழிக்கும் பிறரன்பும் புனிதத்தின் உன்னதபடிகளுக்கு அவரை உயர்த்தின. அவரது அன்புப் பணியின் நறுமணம் சுற்றுச் சூழலிலும் பரவிற்று. அறியப்படாத மறைந்த புனிதையாக வேண்டுமென்பது அவரது ஆவல். ஆனால் அவரது செபத்தின் ஆற்றலைக் கண்டறிந்தவர்கள், கேட்டறிந்தவர்கள் உதவி தேடி அவரிடம் ஓடி வந்தனர். நாளடைவில் செபிக்கின்ற தாயார் என அவரைக் குறிப்பிட்டனர். அவரது இரக்க உள்ளத்திலிருந்து தங்கள் இன்னல், துன்ப நேரங்களில் ஆறுதல் பெற்றனர். தலைவர்களும்,

கீழ்ப்பட்டவர்களும் ஒரே மனதாய் துறவு வாழ்வின் முன்மாதிரிகையாக அவரைச் சுட்டிக்காட்டினர்.

சமூகத்தைச் சீர்திருத்தச் செயல்களத்திலிறங்கிச் சாதனைகள் புரிந்தவர், முன்னேற்றப்பாதையில் புது வழிகளைத் திறந்துக் காட்டினவர், கண்ணைக் கவரும் காரியங்கள் பல செய்து முடித்தவர் என்றெல்லாம் உரிமை பாராட்ட இந்த எளிய கன்னிகையின் மறைந்த வாழ்ககையில் இடமில்லை. ஆயினும் இறைவனை நெருங்கிப் பற்றி நிற்கும் ஒரு ஆன்மாவின் இணையற்ற ஆற்றல், உலகம் கனவு காணாத செபத்தின் நிகரற்ற வல்லமை, நெருப்பில் புடமிடப்பட்ட தங்கம்போல் துன்பத்தால் தூய்மையாக்கப்பட்ட அர்ப்பண வாழ்க்கையின் ஒப்பற்ற மேன்மை, இவையனைத்தையும் வலியுறுத்த வல்லது. இறையடியாள் எவுப்பிராசியம்மாளின் மறைந்த மௌன வாழ்க்கை போற்றுதற்குரிய அந்த மௌனத்தின் இனிய குரல் இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒலிக்கின்றது.

புனித எவுப்பிராசியம்மாளைப் பற்றி தமிழ் மொழியில் வெளிவரும் முதல் நூல் இது. எவுப்பிராசியம்மாளைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்த மனமுவந்து முன்வந்த எபிரேம் அடிகளாருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். எளிய நடையில் படிப்பவர்களின் உள்ளத்தைக் கவரும் முறையில் எழுதப்பட்டுள்ள இந்நூலைப் படிப்பவர்கள் இதை மீண்டும் மீண்டும் படிக்க விரும்புவர். படிப்பவர்கள் அனைவரும் எவுப்பிராசியம்மாளின் முன் மாதிரியின் ஆற்றலையும் செபத்தின் வல்லமையையும் தங்கள் வாழ்க்கையிலும் பெற்றனுபவிப்பார்களாக!

**Chavara Region**
Thuckalay
15-11-2014

**Sr. Viji C.M.C**
Sister Superior



# உள்ளுறை


1. இன்றைய உலகிற்கு ஓர் சவால் ...6
2. விளையும் பயிர் முளையிலே தெரியும் ...7
3. சோதனைக்குப் பின் சோதனை ...9
4. கனவு நனவாகிறது ... 11
5. கண்டிப்புத் தோற்றம் கனிந்த உள்ளம் ...13
6. நல்லாயனின் நல்ல ஆடு ...16
7. செபிக்கின்ற தாயார் ...18
8. நற்கருணையும் செபமாலையும் ...21
9. தாழ்ச்சியும் பிறரன்பும் ...24
10. பாடுகளின் பாதையில் ...29
11. மறுவுலகிலிருந்து ...33
12. மரித்தாலும் மறக்கமாட்டேன் ...37

# 1. இன்றைய உலகிற்கு ஓர் சவால்

கேரளாவில் திருச்சூர் நகருக்கு சுமார் ஆறு கி.மீ. தெற்கே உள்ளது ஒல்லூர். தெற்கே செல்லும் நெடுஞ்சாலை அதன் வழியே கடந்துச் செல்கின்றது. சாலையோரத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றது பழமையானதோர் கட்டிடம். புனித மரியன்னையின் கன்னியர் மடம். அது கார்மேல் அன்னையின் சபைக்குச் சொந்தமான மடம். அன்னையின் கெபியொன்று மட வளாகத்தின் முன்னிலையில் காட்சியளிக்கின்றது. கெபியருகில் ஒரு கல்லறை. அதற்கு முன் மக்கள் கூட்டம் செபித்துக் கொண்டிருப்பதை சாதாரணமாகக் காணலாம். அங்கே அடக்கம் பண்ணப்பட்டிருப்பவர் எவுப்பிராசியம்மாள் என்னும் கன்னிகை. அவர் உயிரோடிருந்தபோது செபிக்கின்ற தாயார் என்று மக்கள் அவரை அழைத்து வந்தனர். அவருடைய செப உதவியைக் கேட்டு மக்கள் இன்று அவர் கல்லறையை நாடி வருகின்றனர். அவரது செபத்தின் ஆற்றலை அனுபவ வாயிலாக அறிந்தபின் நன்றி செலுத்த வந்துக் கொண்டேயிருக்கின்றனர்.

புனித எவுப்பிராசியம்மாள் 1952 ஆகஸ்ட் திங்கள் 29ம் நாள் விண்ணகம் சென்றார். 75 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். அவற்றுள் 50 வருடங்களுக்கு மேல் துறவற மடத்துக்குள் செலவழித்தார். பெரும்பாலும் மறைந்த வாழ்க்கை, கடைசி முப்பது வருடங்கள் நிரந்தர நோயினால் துன்புற்ற வாழ்க்கை. வெளிப் பகட்டான செயல்கள் அவ்வாழ்க்கையில் காணோம். மக்கள் கவனத்தைக் கவரும் வெளிச் சாதனைகளொன்றுமே அவர் புரிய வில்லை. அமைதியிலும் மௌனத்திலும் தனிமையிலும் தன்னையே மறந்து இறைவனுக்காகவும் பிறருக்காகவும் வாழ்ந்தார். செபித்தலே அவருடைய முக்கிய அலுவல். இடையீடின்றி செபித்தார். இரவும், பகலும் செபித்தார். அத்துடன் தன்னையே ஒறுத்தார். உணவில், இளைப்பாற்றியில், வாழ்க்கையின்



வசதிகள் அனைத்திலும் தன்னை ஒறுத்தார். இவையனைத்தும் பிறருக்கென மேற்கொண்டார். முதிர் வயதிலும், நோயுற்று வாடின போதும் பிறருக்கென தன்னைச் செலவழிப்பதில் இன்பங்கண்டார்.

இன்றைய உலகம் பெரும்பாலும் பெருமைப்படுத்துவது செயல் வீரர்களையே, அதுவும் மக்கள் முன் கண்ணைக் கவரும் சாதனை புரிந்தவர்களை மட்டுமே. கண் காணா உலகம் ஒன்று நம் இடையில் செயல்படுகிறது என்பதை கவனிக்க தயங்குகின்றனர் பலர். விசுவாசக் கண்ணோட்டம் நலிவுறுவதே இதற்குக் காரணம். மறைந்த, எளிய, சாதாரண வாழ்க்கையெனினும் அன்பு ஆர்வமுடன் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் வாழ்க்கை மிகச் சிறந்த வாழ்க்கை, பயனுள்ள வாழ்க்கை என்பது நாள் போகப் போக எவுப்பிராசியம்மாள் போன்ற புனித ஆன்மாக்கள் வழி தெளிவுப்படுகின்றது. இவரது செப உதவியை நாடும் மக்கள் பெறும் வரங்களின் வழியை இறைவனும் உறுதிப்படுத்துகின்றார்.

திருச்சபையும் தன் ஒப்புதல் அளிக்க முன் வந்துள்ளது. 1987 ஆகஸ்ட் திங்கள் 27ம் நாள் எவுப்பிராசியம்மாளின் கல்லறை முன் மக்கள் வெள்ளம் முன் கண்டிராதவாறு திரண்டெழுந்தது. கல்லறை முன் முழந்தாளிட்டு மௌனமாக செபித்துக் கொண்டிருந்தார் திருச்சபையின் கர்தினாலொருவர், தமிழகமீந்த தவப் புதல்வர் மார் கர்தினால் சைமன் லூர்துசாமி ஆண்டகை. இரண்டு நாட்களுக்குப் பின் 1987 ஆகஸ்ட் 29 ம் நாள், எவுப்பிராசியம்மாள் விண்ணகம் எய்தின முப்பத்தைந்தாண்டு நிறைவு நாளன்று அவரே எவுப்பிராசியம்மாளுக்கு முத்திப் பேறு பட்டம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை தொடங்கி வைத்தார். 2006 டிசம்பர் 3ல் முத்திப்பேறு பெற்ற எவுப்பிராசியம்மா என்று திருத்தந்தை போப் 16 ஆம் பெனடிக்ட் அறிவித்தார். அதைத் தொடர்ந்து மேன்மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2014 நவம்பர் 23ல் முத்திப்பேறு பெற்ற எவுப்பிராசியம்மாவுக்கு, திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. செபிக்கின்ற தாயாக, இன்று நம் அனைவருக்காகவும் இறைவனிடம் பரிந்து பேசி நலன்களைப்பெற்றுத் தருகிறார் புனித எவுபிராசியா.

# 2. "விளையும் பயிர் முளையிலே தெரியும்"

கேரளாவில் திருச்சூர் மறைமாவட்டத்தில் எடத்துருத்தி என்னும் பங்கில் எலுவுத்திங்கல் இல்லத்தில் 1877 அக்டோபர் 7ஆம் நாள் இவர் பிறந்தார். திருச்செப மாலையன்னையின் விழாவன்று இவர் பிறந்தது பிற்காலத்தில் இவர் திருச்செபமாலை அன்னையின் மீது கொண்டிருக்கப் போகும் தனிப் பக்தி ஆர்வத்தின் முன்னடையாளமாய் இருந்திருக்கலாமல்லவா? இவரது தந்தையின் பெயர் அந்தோணி, தாய்

குஞ்ஞேத்தி. பிறந்து ஏழு நாட்களுக்குப் பின் குழந்தைக்குத் திருமுழுக்கு கொடுத்தனர். அத்துடன் ரோசா என்னும் பெயரைச் சூட்டினர்.

இல்லத்தின் முதற் புதல்வியானதால் செல்லமாக வளர்த்தனர். எதற்கும் குறைவில்லை. உணவு, உடை, வாழ்க்கை வசதிகள் அனைத்தும் தேவைக்கு மேல் அளித்தனர். தன் செல்வப் புதல்வி வளர்ந்து பருவமுற்று பெருமை வாய்ந்ததொரு இல்லத்தில் மணமுடித்து, தன் குடும்பத்திற்குப் பெருமையையும், செல்வாக்கையும் கொண்டு வரும் நாளைக் கனா கண்டு கொண்டிருந்தார் தந்தை. ஆனால் ரோசாவின் கனவோ!

கோபக்குணம் தந்தையின் ஒரு பலவீனம். அத்துடன் தான் நினைத்ததை எவ்வித எதிர்ப்பிற்கும் அஞ்சாமல் செயல்படுத்தும் உறுதி கொண்டவர். தந்தையின் இப்பண்புகளை ஓரளவிற்கு மகளும் கொண்டிருந்தாள். குறிப்பாக தான் நினைத்ததைச் செயல்படுத்தும் உறுதியான மனம். ஆனால் தாயின் பண்பு வேறானது. குல மகிமையும் செல்வப் பெருக்கும் அந்த நாட்டுப் புறத்துப் பெண்ணை ஆட்டி வைக்கவில்லை. அடக்கமும், சாந்தமும் அவளுக்கு இயல்பிலேயே அமைந்திருந்தன. அத்துடன் ஆழ்ந்த செபப் பற்றும் அவளிடம் இருந்தது. இச்செபப்பற்று தான் தாயிடமிருந்து ரோசா பெற்றுக் கொண்ட சிறப்புக் கொடை. சிறு வயதிலிருந்தே அவளுக்குச் செபத்தில் தனி ஆர்வம். அத்துடன் நிற்கவில்லை. தன்னையே இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்னும் அவா அவளில் வளர்ந்துக் கொண்டே வந்தது, அவளுக்கு ஓர் கனவு. 9வது வயதில் தன் கன்னிமையைக் கடவுளுக்கு நேர்ந்தளித்தாள். துறவற மடத்தில் நுழைந்து கன்னிகையாக மாறும் நாளைக் கனா கண்டுக் கொண்டிருந்தாள். தந்தையின் கனவை வீணாக்குவதா? அதன் விளைவை மனதில் கண்டாள், அஞ்சினாள். ஆயினும் உறுதி குன்றவில்லை. துணிவை இழக்கவில்லை. கடும் போராட்டம் ஒன்று நிகழப் போவதை முன்னால் கண்டாள். உதவிக்கு அண்டிச் சென்றாள் தன் ஆன்ம நண்பர் இயேசுவிடம், அவரது அருமை தாய் அமல அன்னையிடம் தன் விருப்பத்தை தெளிவாக வெளியிடத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தாள். தருணம் வந்ததும் எளிய முறையில் திறந்து கூறினாள் தன் தந்தையிடம். "நான் துறவறக் கன்னிகையாக விரும்புகிறேன்." தந்தை இதை எதிர்பார்க்கவே இல்லை. பல வருடங்களாக கட்டி எழுப்பின மனக் கோட்டைகள் நொடிப் பொழுதில் தரைமட்டமாவது போல் உணர்ந்தார். அவரால் தாங்க முடியவில்லை. கோபத்தால் அலறினார், கதறினார், இவளுக்கு எங்கேயிருந்து வந்தது இந்தத் துணிவு! பெற்று வளர்த்த பெற்றோரின் விருப்பத்தை எதிர்ப்பதா? குடும்பத்தின் பெயரையும், பெருமையையும் காற்றில் பறக்க விடுவதா! முடியவே முடியாது! இந்த ஜென்மத்தில் இதற்கு சம்மதிக்கவே மாட்டேன். பார்ப்போம் உனது துணிவை.



ரோசா மனம் தளரவில்லை. செபத்தில் தஞ்சம் புகுந்தாள். அமல அன்னையை நாடிச் சென்றாள். "அன்னையே என்னை உம் திருமகனின் மணமகளாக்கியருளும்" என்று மனமுருகி வேண்டினாள். அவளுக்கு வழி திறப்பது செபம் என நன்கு உணர்ந்திருந்தாள். ஓயாது செபித்தாள். நாள் முழுதும் ஓர் அறைக்குள் இருந்து தனிமையில் செபிப்பாள்

தந்தையின் மனம் மாறினபாடில்லை. இல்லத்தின் முதல் புதல்வி மணமாகத் தான் வேண்டும். வேண்டுமென்றால் ரோசாவின் தங்கை கொச்சுதிரேஸ் கன்னியர் மடம் சேர்ந்து கொள்ளட்டும், என அவர் முடிவு காட்டினார்.

ஆண்டுகள் பல உருண்டோடின. ரோசாவின் மனம் அணுவளவும் அசையவில்லை. நம்பிக்கையுடன் செபித்துக் கொண்டே இருந்தாள். எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடந்தது. ரோசாவின் தங்கை கொச்சுதிரேஸ் திடீரென நோயுற்று இறந்தாள். தந்தையின் மனம் இளகிற்று. ஒரு நாள் ரோசாவை அழைத்தார். "மகளே, உன் விருப்பம் போல் நீ துறவற மடத்துக்குப் போகலாம்" என்று தெளிவாக, உறுதியாகக் கூறினார். அப்போது ரோசாவுக்கு வயது பன்னிரெண்டு.

## 3. சோதனைக்குப் பின் சோதனை

பெண்களுக்கென கேரளாவில் துவங்கப்பட்ட முதல் துறவற சபை கார்மேல் அன்னையின் சபை, அதைத் தொடங்கியவர் புனித சாவற குரியாக்கோஸ் அடிகளார். 1866ம் ஆண்டு பிப்ரவரி 13ம் நாள் கூனம்மாவு என்னுமிடத்தில் நான்கு அங்கத்தினர்களுடன் தொடங்கப்பட்டது. இன்று அதன் கிளைமடங்கள் சுமார் நாறுாறுக்கும் மேற்பட்டவை. அங்கத்தினர்கள் ஆறாயிரத்திற்கும் மேல் உள்ளனர். மடம் தொடங்கி இரண்டு வருடங்களுக்குள் இளம் பெண்களை, குறிப்பாக சபையில் சேரும் நோக்கமுள்ளவர்களைத தங்க வைத்து கல்வி கற்பிப்பதற்கென மடத்தோடிணைந்து ஒரு உள் விடுதியும் தொடங்கப்பட்டது. 1888 அக்டோபர் 24ம் நாள் ரோசா தனது 12 ஆவது வயதில் இந்த உள் விடுதியில் மாணவியாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ரோசாவுக்கு மோட்சமடைந்த உணர்ச்சி, உள் விடுதி மிகவும் பிடித்து விட்டது. ஒரே குறிக்கோளுடன் வந்த சிறுமிகள், ஒழுங்கான வாழ்க்கை அன்றாட வாழ்க்கையில் செபத்திற்கு சிறப்பிடம் கொடுத்தனர். தனது விருப்பத்திற்கேற்ப வாழ்க்கை முறை ஆயினும் சோதனை அவளைப் பின்தொடர்ந்தது.

தையல், படம் வரைதல் போன்றவைகளில் திறமை பெற்றாள். ஆனால் படிப்பில் சற்று பின்னோக்கம். அது போதாதென உடல் நலக்குறைவும், காய்ச்சல், உடலில் கொடிய வலி, களைப்பு போன்றவை

இடையிடையே வருவதும் போவதுமாய் இருந்தன. தலைவர்கள் தெளிவுபடக் கூறினர், நீ வீட்டுக்குப் போக வேண்டும். ரோசாவின் உள்ளம் உடைந்தது. ஆயினும் மனந்தளரவில்லை. செபமே அவளது தஞ்சம். விடாப்பிடியாக செபித்தாள். அன்னை மரியிடம் உருக்கமாக வேண்டினாள். நான் உன் மகளல்லவா உமது சபையில் சேர்ந்து என் பலி நிறைவேற்ற எனக்கு அனுமதி தாரும். அன்று மட்டுமல்ல என்றும் அவள் கன்னித்தாயைப் பற்றி நின்றாள். தாயும் அவளைக் கைவிடவில்லை. என்றும் தம் மகளென காப்பாற்றினாள்.

அதிகாரிகள் என்ன செய்வதென தெரியாமல் அங்கலாய்த்தனர். ஒழுக்கத்தில் சிறந்தவள். செபத்தில் ஆர்வம் மிக்கவள். பணிவில் குறை வற்றவள். தம் சபைக்கே ஓர் அரிய பொக்கிஷமாகக் கூடியவள். ஆயினும் உடல் நலமின்றி எவ்வாறு சபையில் சேர்ப்பது, படிப்பில் பின்னோக்கமென்பது போகட்டும். இறுதியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். அத்தீர்மானத்தின்படி சிறிது காலத்திற்கு ரோசவை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

ரோசா அஞ்சினாள். தன் கனவுகள் முடிவடையப் போகின்றனவா. மனம் நொந்தாள். ஆயினும் தளரவில்லை. மீண்டும் செபம். இறைவன் எல்லாம் வல்லவர். தன் அன்புத் தாய் தன்னைக் கைவிட மாட்டாள் என உறுதியாக நம்பினாள். அவளது நம்பிக்கை வீணாகவில்லை. சிறிதளவு உடல் நலம் தேறிய ரோசா உள் விடுதிக்குத் திரும்பவும் அழைக்கப்பட்டாள். திரும்பிச் சென்றாள். மீண்டும் விண்ணகம் நுழைந்த உணர்ச்சி. ஆனால் அவளுக்காக இன்னும் பெரிய சோதனை காத்திருந்தது.

1889 செப்டம்பர் மாதம் கொடியவாத நோய் அவளைத் தாக்கிற்று. வீட்டிற்கும் அனுப்ப முடியாத நிலைமை. உணர்வின்றி, பேச்சு மூச்சின்றி கிடந்தாள். நோயில் பூசுதலும் வழங்கப்பட்டது. இனி அவர் உயிர் பிழைக்க மாட்டாள் என்று உறுதியாக எண்ணி கன்னியர்கள் அவளது படுக்கையைச் சூழ்ந்து நின்றனர். அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். திடீரென ஒரு மாற்றம். ஆச்சரியம் மேலிட்டவர்களாய் கூர்ந்து கவனித்தனர் கன்னியர்கள். ரோசாவின் முகம் மலர்ந்தது. ஒளி வீசிற்று. யாரையோ உற்றுப் பார்ப்பது போல் யாருடனோ பேசுவது போல் காட்சியளித்தாள்.

முகத்தில் ஓர் அமைதி. யாரையோ வரவேற்பதுபோல் கரங்களை நீட்டினாள். அனைத்தும் நோயின் விளைவுகளென எண்ணினர் பார்த்து நின்ற கன்னியர்கள். ஆனால் வேறென்னவோ என விரைவில் உணரத் தொடங்கினர், சில மணி நேரங்களுக்குள் ரோசா குணமடைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஒரு சில நாட்களுக்குள் குணமடைந்து படுக்கையை விட்டெழும்பினாள்.



முற்றிலும் குணம் பெற்றாள். கன்னியர்கள் அவளிடம் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர். புன்னகையுடன் தப்பி மாறினாள் ரோசா. ஆனால் மடத்துத் தலைவி ஆக்னேசம் தாயார் முன் மௌனம் சாதிக்க முடியவில்லை. திருக்குடும்பம் தனக்குக் காட்சியளித்ததும், தான் ஒரு கன்னிகையாக பல ஆண்டுகள் சபையில் வாழ்ந்த பின் தான் இறப்பேன் என தனக்கு அறிவிக்கப்பட்டதையும் தாழ்மையுடனும், நேர்மையுடனும் வெளிப்படுத்தினாள். மடத்துத் தாயார் அனைத்தையும் குறித்து வைத்துக் கொண்டார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் ரோசா தன் சொந்த மறை மாவட்டத்தில் புதிதாக தொடங்கப்பட்ட மடத்துக்கு அனுப்பப்பட்டபோது ஆயர் ஜான் மார் மேனாச்சேரி ஆண்டகைக்கு தாயார் இக்குறிப்பையும் அனுப்பி வைத்தார். அத்துடன் கீழ்வரும் வசனமும் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சி நடைபெறுமுன், இப்பிள்ளையை மடத்தில் ஏற்றுக் கொள்ளாமல் வீட்டுக்கு அனுப்பி விடுவதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்நிகழ்ச்சியினாலும் பிள்ளையின் அடக்கவொடுக்கம், பக்தி ஒழுக்கம் ஆகியவற்றாலும் இவளை மடத்தில் மீண்டும் ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இப்படிக்கு

*கூனம்மாவின் மடத்துத் தாயார்,*
*இயேசுவின் ஆஞ்னேஸ்.*

## 4. கனவு நனவாகிறது

மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்ட ரோசா இறை பராமரிப்பில் முன்னையை விடப் பன்மடங்கு நம்பிக்கை கொண்டாள். துறவற வார்த்தைப் பாடுகளால் இறைவனுக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் அந்த நாளுக்காக ஆவலுடன் ஏங்கினாள். இன்னும் எட்டு நீண்ட வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. அவளுடைய கனவுகள் மலர ஆயினும் அவள் சலிப்புறவில்லை. சந்தேகப்படவில்லை. இறைத் தந்தையின் பராமரிப்புக்குத் தன்னை முற்றிலும் கையளித்து விட்டாள்.

1896ஆம் ஆண்டு திருச்சூர் மறை மாவட்டம் புதிதாக ஏற்படுத்தப் பட்டது. அதன் முதல் ஆயர் மார் ஜான் மேனாச்சேரி ஆண்டகை தம் மறைமாவட்டத்தில் கன்னியர் மடமொன்றை நிறுவ விரும்பினார். திருச்சூர் மறை மாவட்டத்தின் முதல் கன்னியர் மடம் 1897 மே திங்கள் 9ம் நாள் அம்பழக்காட்டில் புனித சூசையப்பர் பாதுகாவலில் தொடங்கி வைக்கப்பட்டது. அம்மடத்துக்கு அனுப்பப்பட்ட முதல் உறுப்பினர்களில் ரோசாவும் ஒருவள். மடம் தொடங்கின அன்றே அவள் வேட்பாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டாள். எவுப்பிராசியாள் என்னும் புது பெயரும்

அவளுக்கு அளிக்கப்பட்டது. ஆயினும் தன் கதியை அடையுமுன் துன்பத்தின் நீண்ட பாதையை இன்னும் அவள் கடந்துச் செல்ல வேண்டியிருந்தது. நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவளை தாக்கின. அவளது பன்னிரெண்டாவது வயதில் நிகழ்ந்தது போல் திரும்பவும் சாகுந்தருவாயில் ஆனாள். பல நாட்கள் அசைவற்றுக் கிடந்தாள். என்ன நோய் என்று மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உயிர் பிழைக்கமாட்டாள் என்று எண்ணிய அதிகாரிகள் நோயில் பூசுதலும் வழங்கினர். எதிர்பாராதவாறு குணமடையத் தொடங்கினாள். சில நாட்களுக்குள் முற்றிலும் நலமடைந்தாள். இந்நிகழ்ச்சியைப் பற்றி அம்பழக்காட்டு மடத்தின் நாள் குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளதாவது 1897 ஜூலை திங்கள் 29 ஆம் நாள் முன் கூறிய சகோதரி எவுபிராசியாவுக்கு சாவுக்குரிய நோய் கண்டதனால் குருவானவரை அழைத்து நோயில் பூசுதல் வழங்கப்பட்டது. மிக மோசமான நிலை யிலிருந்த நோய் திடீரென குணமானது. இவளுக்கு இதைப் போன்ற, இதையும் விட மேலான பல அரும் பெரும் நிகழ்ச்சிகள் 12 வது வயது முதல் பகிரங்கமாக நடந்திருக்கின்றன. பல இறை வெளிப்பாடுகளும், நிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன. மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் துன்ப மிகுதியால் ஒருபோதும் முறையிடாமல் மிகப் பொறுமையுடன் ஏற்று வந்தாள். வாழ்க்கை முழுவதுமே பாடுகளென தென்படுகின்றது.

ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த நாள் நெருங்கி வந்துக் கொண்டேயிருந்தது. 1898 ஜனவரி 10 ஆம் நாள் திருச்சூர் மறை ஆயர் மார் ஜான் மேனாச்சேரி அடிகளாரின் கரங்களிலிருந்து துறவற உடையை பெற்றுக் கொண்டாள். தனது அர்ப்பணத்தின் அடையாளமே துறவற உடை என்பதை நன்கு உணர்ந்திருந்தாள். தன் செப, தவ முயற்சிகளை முன்னை விட அதிகரித்தாள். தன் நவத்துறவு தலைமையாளரின் கண்காணிப்பில் அனைத்தையும் மேற்கொண்டாள். இயன்றளவு ஒறுத்தல்கள், இடைவிடா செபம், தனிமையில் சகித்தல் இவ்வாறு முன்னேறியது, அவளது வாழ்க்கைமுறை. இருளின் வல்லமைகளும் அவளை சும்மா விட்டு விடவில்லை. பேயின் தாக்குதல்களை வெளிப்படையாக அனுபவித்தாள். இது தவிர, சந்தேகங்களும், குறை கூறுதல்களும் தவறான எண்ணங்களும் அவளை வாட்டி வதைத்தன. இவையனைத்தும் அவளது சகிப்புத் தன்மையை அதிகரிக்க உதவின. பிறரின் ஈடேற்றத்துக்காக அனைத்தையும் பயன்படுத்தினாள். குறிப்பாக உத்தரிப்பு ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கும், பாவிகள் மனந்திரும்பவும் தகுந்த வழிகளென இவையனைத்தையும் பயன்படுத்தினாள்.

மடத்தில் கன்னியர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருந்தது. புதுமடமொன்று தொடங்க ஏற்பாடாயிற்று. திருச்சூர் அருகே ஒல்லூர் என்னுமிடத்தில் 1900 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் புது மடத்தின் திறப்பு விழா என குறிக்கப்பட்டது. அன்றைய தினம் நவ



கன்னியர்களின் நித்திய அர்ப்பணமும் நடைபெறும் என நிச்சயிக்கப்பட்டது. ஆவலுடன் காத்திருந்த அரும் பெரும் நாளும் வந்தணைந்தது. தனது செப தவங்களை இன்னமும் பெருக்கி முழு ஆர்வமுடன் தன்னைத் தயாரித்தாள் எவுபிராசியாள். முன்னமே அவள் தன்னை முற்றிலும் இறைவனுக்கு அர்ப்பணித்திருந்தாள். அந்த அர்ப்பணம் திருச்சபை யின்முன் அன்று பகிரங்கமாக உறுதிப்படுத்தப்பட்டது, ஒல்லூர் மடத்தின் துவக்க நாள், அவளது வாழ்க்கையிலும் ஒரு புதுத் திருப்பத்தின் நாள். இனி அவள் வாழ்வது இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமாக மட்டுமே. அவளது வருங்கால வாழ்க்கையின் மூன்று வருடங்கள் தவிர எஞ் சியதனைத்தையும் இம்மடத்திலேயே செலவழித்தாள்.

## 5. கண்டிப்புத் தோற்றம், கனிந்த உள்ளம்

ஒல்லூர் மடம் அமல அன்னையின் பெயர் கொண்டது. அத்தாயுடன் நெருங்கி ஒன்றுபட்டு தம் அர்ப்பண வாழ்வை முன்னைவிட இன்னும் ஆர்வமுடன் முன் நடத்த முயற்சித்தாள் எவுபிராசியாள். தன் சூழ்நிலைக்கேற்ப பிறர் நலனுக்காக தம்மாலானதனைத்தையும் செய்ய தன்னை தயார் செய்தாள். அவள் கையாண்டது செபம், தவம், ஒறுத்தல், சகித்தலின் வழிகள். மடத்துக்குள் அடைபட்ட வாழ்க்கை, ஆயினும் ஆர்வமிக்க அவ்வாழ்க்கை சூழலிலும் தன் ஒளி பரப்பத் தவறவில்லை. அவளது செபப் பற்றும், முன் மாதிரிகையான வாழ்க்கையையும் கவனித்த தலைவர்கள் நவ கன்னியர்களின் தலைவிக்கு உதவியாளராக அவளை நியமித்தனர். அத்துடன் நோயுற்ற சகோதரிகளைக் கவனிப்பதும் அவளது அலுவல். மடத்தின் எளிய வேலைகளைத் தனதாக்குவதில் மகிழ்ச்சி கண்டாள். இறைவனுக்காக, பிறருக்காகச் சகித்தல் அவளது ஆவல்.

மூன்று ஆண்டுகளுக்குமேல் துணை தலைவியாகப் பணியாற்றியபின் 1904 ஆம் ஆண்டு துவக்கத்தில் நவத்துறவு தலைவியாக நியமிக்கப்பட்டார். பொறுப்புணர்வுடன் கன்னியர்களின் ஒன்பது ஆண்டுகள் இவ்வலுவலைக் கவனித்தாள். எவுபிராசியம்மாள் கனிவுமிக்க உள்ளம் படைத்தவராயினும் சில வேளைகளிலாவது அவரது முகம் கண்டிப்புத் தோற்றம் அளிப்பதுண்டு. நவத்துறவிகளின் தவறுதல்களைத் தகுந்த முறையில் கண்டிக்கத் தயங்கவில்லை. தானும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களும் ஒழுங்கு முறைகளைச் சரிவரப் பின்பற்ற வேண்டுமென்பதில் அக்கறையாகயிருந்தார். நவத்துறவிகளிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வதாகத் தன்னைப் பற்றி ஆட்சேபனை எழுவதை அவர் உணராமலில்லை. ஆயினும் தான் மிகவும் அன்பு செய்யும் தன் சிறு சகோதரிகள் தூயவர்களாய் ஞான வாழ்வில் முன்னேற வேண்டுமென்பதே தன் ஒரே நோக்கமென்று தன் ஞானத் தந்தைக்கு எழுதும்போது குறிப்பிடுகின்றனர். சோம்பல்,

அகங்காரம் இவைகளிடம் எவ்வித இளக்காரமும் காட்ட மறுத்தார். நவத்துறவிகளில் பெரும்பான்மையோர் சகோதரியின் படிப்பினையால் பயனடைந்தனர். ஆயினும் இதை விரும்பாத ஒரு சிலரும் இல்லாமல் இல்லை. இவர்களிடமிருந்து பிற்காலத்தில் ஓரளவு கசப்பும் துன்பமும் ஏற்க வேண்டியிருந்தது. தம் சொந்தப் பிள்ளைகளிடமிருந்து வரும் இவ்வுணர்ச்சிகள் பளுமிக்கவை. அனைத்தையும் வரவேற்றார். சகித்தார்.ஆயினும் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றுவதிலிருந்து அணுவளவும் அசையவில்லை. குற்றஞ்சாட்டல்களுக்கும் குறை கூறல்களுக்கும் பதிலளிக்க முற்பட வில்லை, பதிலாகத் தன் அன்பை அளிக்க முயற்சித்தார். மௌனமாக சகித்தார். அதன் வழி இறைமகிமைக்கும் பிறர் நலனுக்குமாக பாடுபட ஆவல் கொண்டார்.

நிலையான முயற்சி, இடைவிடாப் பயிற்சியின் வழியாக இவர் தாழ்மையையும் கீழ்படிதலையும் பழகி வந்தார். இதே வழியில் தம் நவத்துறவிகளும் வளர விரும்பினார். புனித வாழ்வுக்கு நாவடக்கம் எவ்வளவு இன்றியமையாததென நன்குணர்ந்திருந்த எவுபிராசியம்மாள் இதை கவனமுடன் கடை பிடிக்க வேண்டிய நான்கு தனிச் சூழ்நிலைகளைக் குறிப்பிடுகின்றார்.

I) ஒரு தலைவர் மாறி வேறொருவர் தலைவராக வரும்போது.

II) இன்னொருவரின் அலுவலை நாம் ஏற்றெடுக்கும்போது,

III) பிற மடத்திலுள்ளவர்கள் நம் மடத்தில் வரும் போதும் நாம் பிறமடங்களில் போகும்போதும்.

IV) மனம் குழம்பியிருக்கும்போது.

தமது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு சிறு சகோதரியையும் அவர் நன்கு புரிந்துக் கொண்டார். அவர்களது சிறிதும் பெரிதுமான தேவைகள் ஒவ்வொன்றையும் அக்கறையுடன் ஆராய்ந்திருந்தார். தங்கள் தலைவியிடமிருந்து எதுவும் எளிதில் மறைத்து வைக்க அவர்களால் இயலவில்லை. நோயுறும்போதும் களைப்புற்றிருக்கும்போதும் இந்த அன்புப் பராமரிப்பை தனிப்பட்ட முறையில் பெற்றனுபவித்தனர். அவரது நவத்துறவிகளிலொருவர் பிற்காலத்தில் கூறின சாட்சியமாவது. அன்றொரு முறை மடத்து வளாகத்தில் குளம் தோண்டிக் கொண்டிருந்தனர். வேலையாட்கள் வெட்டிப்போடும் மண்ணை மாலையில் நாங்கள், நவகன்னியர்கள் போய் வெளியில் அள்ளிப்போட வேண்டும். நாங்கள் வேலைக்குப் புறப்படும்போது எவுபிராசியம்மாளும் எங்களுடன் வருவார். எங்களுடன் குளத்திலிறங்கி மண்ணை அள்ள அவருக்கு உடல் வலிமை இல்லை.



அந்நேரம் முழுவதும் அவர் குளத்தோரம் அமர்ந்து செபமாலை செபித்துக் கொண்டிருப்பார். பிள்ளைகளுக்கு களைப்பும் வியாதியும் வராமலிருப்பதற்காக என எங்களிடம் கூறுவார். வேலை முடிந்ததும் சமையலறைக்குக் கூட்டிச் சென்று காப்பியும் சிற்றுண்டியும் அருந்த வைத்தபின் மட்டும் எங்களைப் போக விடுவார். இவ்வாறு எங்களை அன்பு செய்த கனிவும் திடமுமுள்ள புனிதத் தாயார் அவர்.

தம் நவத்துறவிகளைப் பற்றி மடத்தின் ஏனைய அங்கத்தவர்கள் குறைவான எண்ணங்களைத் தெரிவிக்கும்போது அவர்களுக்காகப் பரிந்து பேச முன் வருவார். ஒருமுறை ஒரு நவத்துறவியின் நடத்தை யிலுள்ள குறைபாடுகளைப் பற்றி மடத்துக் குழுவினரின் கருத்தையறிந்த ஆயரவர்கள் அந்நவத்துறவியை வேறொரு மடத்துக்கு இடம் மாற்றக் கேட்டுக் கொண்டார். அப்போது எவுபிராசியம்மாள் ஆயரிடம் தாழ்மையுடன் வேண்டியதாவது. தந்தையே, பிள்ளையைத் திருத்த இயன்ற மட்டும் முயற்சிக்கிறேன். அவளும் திருத்தங்களை ஏற்றுக் கொண்டு செயல்பட முயற்சிக்கிறாள். இந்நிலைமையில் அவளை இடம் மாற்றுவது எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவளது நடத்தையும் குழுவின் கருத்தும் மாறினபின் எங்கேயாவது இடம் மாறினால் கவலைப்பட மாட்டேன். வருங்காலம் அவளைப் பற்றிய குறைவான எண்ணம் பிறர் தெரிந்துக் கொள்ளாமலிருப்பதல்லவா நலம்.
(கடிதம், 1907 மே 22)

இதுபோன்ற நிகழ்ச்சிகள் வேறு பல உள்ளன. இவ்வாறு தாயன்புடன் தன் பிள்ளைகளுக்காகப் பரிந்துப் பேசும் கருணை உள்ளத்தைக் கல் நெஞ்சமென யார் சொல்லத் துணிவர்? செபப் பற்றிலும் பிறரன்பிலும் இளங்கன்னியர் சிறந்தோங்கத் தனிக்கவனம் செலுத்தினார். சிறு காரியத்திலும் பிறருக்கு இக்கட்டு இடைஞ்சல் வராமல் கவனிக்குமாறு புத்தி கூறினார். பிறருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையைப் பின் பற்றினார். பிறருக்கும் எடுத்துரைத்தார்.

ஒன்பது ஆண்டுகள் எவுபிராசியம்மாள் நவத்துறவிகளின் தலைவியாகப் பணியாற்றினார். 1913 ஆம் ஆண்டு அப்பதவியிலிருந்து விடுவிக்கப் பெற்று ஒல்லூர் மடத்தின் தலைவியாக நியமிக்கப் பெற்றார். பதவியையும், பெருமையையும் இயல்பிலேயே வெறுத்த அந்த எளிய உள்ளம் இதை விரும்பவில்லை. ஆயினும் இறைச் சித்தத்தை முழுமனதுடன் வரவேற்றார். மூன்று வருடம் பொறுப்பு உணர்வுடன் இப்பணியை நிறைவேற்றினார்.

தம் உடன் கன்னியர்களை நேர்மையுள்ளத்துடன் அன்பு செய்தார். ஆயினும், யாருடையவும் முகம் பாராமல் தவறுதல்களைத் திருத்த தயங்கவில்லை. துறவற ஒழுங்கனுசரணையில் அவரே

அனைவருக்கும் முன் மாதிரிகையாக விளங்கினார். சொகுசான, உலகப் போக்கான வாழ்க்கை முறைகளை அவர் பொறுத்துக் கொள்ளமாட்டார். பொறுப்புணர்வற்ற நடத்தையைக் கண்டிக்கத் தவறவும் மாட்டார். தாய்க்குரிய, அவளுடைய அன்பிலிருந்தும், துறவற ஆர்வத்திலிருந்துமே அனைத்தும் வெளிப்பட்டன என்பதை உடன் கன்னியர்கள் புரிந்துக் கொண்டனர்.

துவக்கத்திலிருந்தே எவுப்பிராசியம்மாள் மடத்தின் ஆட்சியை யேசுவின் திரு இருதயத்தினிடம் ஒப்படைத்தார். அழகான திரு இருதய உருவமொன்றை மடத்தின் ஒரு முக்கிய இடத்தில் வைத்தார். தினமும் தன் அலுவல்களைத் துவங்குவதும் முடிப்பதும் அங்கேயே. போகும்போதும் வரும்போதும் அத்திரு இருதயத்தை உற்றுப் பார்ப்பார். அவருடைய இருதயத்திலும் ஆட்சி புரிந்தார் யேசுவின் திரு இருதயம்.

தன் உடன்கன்னியர்களின் ஆத்தும நலன்களிலென்றது போல் உடல் நலத்திலும் அதிமிகக் கவனம் செலுத்தினார் எவுப்பிராசியம்மாள். பண நெருக்கடி ஏற்பட்ட போதும் தன் பிள்ளைகளுக்கு நல்ல உணவைப் பரிமாற விரும்பினார். அதற்காக முடிந்தவரை முயற்சித்தார். வழக்கத்தை விட ஏதாவது விசேஷ உணவை பரிமாற முடிந்தால் அன்று அதிக மகிழச்சி கொள்வார். நோயுற்றோரிடம் தனி அன்பும் கவனமும் செலுத்தினார். தாய்க்குரிய பரிவன்புடன் அவர்களுக்கு ஓய்வும் மருத்துவ உதவியும் அளித்து பராமரிக்கத் தனித் திறமை கொண்டிருந்தார். நவத்துறவற கன்னியர்களின் தலைவியாகவும் கன்னியர் இல்லத் தலைவியாகவும் பணிபுரிந்த பதினாறு வருடங்களும் கண்டிப்புள்ள தலைவி என்பதை விட கனிவுள்ள தாயாக விளங்கினார் எவுப்பிராசியம்மாள்.

## 6.நல்லாயனின் நல்ல ஆடு

திருச்சூர் மறை மாவட்டத்தின் முதல் கன்னியர் மடம் கார்மேல் அன்னையின் சபை மடம் அம்பழக்காட்டில் துவக்கி வைத்தவர் அப்போதைய அம்மறை மாவட்டத் ஆயர் மார் ஜான் மேனாச்சேரி ஆண்டகை அவர்கள். அதன் முதற்கிளை மடம் ஒல்லூரில் நிறுவினவரும் அவரே. எவுப்பிராசியம்மாள் தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை இங்கேயே செலவழித்தார். புது மடத்தின் அங்கத்தினராக அனுப்பப்பட்டபோதே எவுப்பிராசியம்மாளைப் பற்றி ஆயரவர்கள் கேள்வியுற்றிருந்தார். துவக்க முதல் ஆயரவர்கள் எவுப்பிராசியம்மாளின் ஆத்தும குருவாகச் செயல்பட்டார். பெரும்பாலும் அவரே அவளது பாவ சங்கீர்த்தனமும் கேட்பார். இப்புனித ஆயருடன் அவள் கொண்ட ஆத்தும உறவு அவளுக்கு ஆறுதலும் ஊக்கமும் அளித்தது. இந்த எளிய ஆன்மாவில் நிகழ்ந்து வரும் அரிய காரியங்களை ஆயரவர்கள் விரைவில் உணர்ந்து கொண்டார். ஆயினும் அவளை நன்கு சோதிக்கவும் சீர்தூக்கிப் பார்க்கவும் அவர் தயங்கவில்லை.



எவுப்பிராசியம்மாள் முழுமையாகவும், நேர்மையுடனும் தன் ஆன்ம நிலையை ஆயருக்கு வெளிப்படுத்தினார். அதன் இயற்கை நாட்டங்கள், பலவீனங்கள், சோதனைகள், வீழ்ச்சிகள், கலக்கங்கள், இறைவனளிக்கும் ஆறுதல்கள், அருட்கொடைகளனைத்தையும் வெளிப்படுத்தினார். நேரில் கண்டு பேச முடியாதபோது கடிதம் மூலமாக எழுதித் தெரிவிப்பார். ஆயரவர்கள் அக்கடிதங்களனைத்தையும் ஒரு பொக்கிஷமென காப்பாற்றி வந்தார். இன்றும் அவை பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. மறைந்த அந்த வாழ்விற்குள், ஒளி வீசும் கடிதங்கள் என்றும் உயிர்துடிப்புகளாய் மிளிர்கின்றன.

ஆயரின் கட்டளைகளிலும், அறிவுரைகளிலும் இறைவனின் திருவுள ளத்தைக் கண்டார் எவுப்பிராசியம்மாள். அவர் 1901 அக்டோபர் 15 ஆம் நாள் பின்வருமாறு எழுதுகின்றார். தந்தையே தகுதியற்ற பிள்ளையாகிய எனக்கு எதைக் கற்பித்தாலும் அது என் மனதுக்கு எவ்வளவு தான் மாறானதாகத் தென்பட்டாலும், கீழ்படிதலின் பெயரால் நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறேன். உங்கள் கட்டளைக்கும் யோசனைக்கும் மாறாக இந்நாள் வரை நான் நடந்ததில்லை. இறைவனின் உதவியால் இனிமேல் நடக்கவும் மாட்டேன் என உறுதி கொண்டுள்ளேன். அதே ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் நாள் எழுதின சொற்கள் அவரது மனப்பான்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன. கடவுளுக்காக ஏதாவது எனக்கு சகிக்க வேண்டும். தலைவர்கள் என்ன கற்பித்தாலும் எதைச் சொன்னாலும் அதை வரவேற்பதிலும், நிறைவேற்றுவதிலும் இன்பங்கொள்கிறேன். மீண்டும் அவ்வாறு கிடைக்க ஆவலும் கொண்டுள்ளேன். தனக்கு நிகழும் அனைத்தையும் தன் நன்மைக்காகப் பயன்படுத்த இப்புனித ஆன்மா விரைவில் கற்றுக் கொண்டது. 1905 ஆகஸ்ட் 4 ஆம் நாள் இவ்வாறு எழுதுகின்றார். “தந்தையே யாராவது என்னைப் பற்றி குற்றமோ, குறையோ சொல்வதைக் கேட்பது என் இதயத்துக்கு மிகுந்த பயனளிக்கின்றது.”

தமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட இளம் சகோதரிகள் புனிதத்தின் படிகளை விரைவில் ஏறிச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்பினார். அதற்குக் கொடுக்க வேண்டிய விலையையும் பொருட்படுத்தவில்லை. என்ன விலை கொடுக்க வேண்டினும் இறையன்பில் இடைவிடாது வளர வேண்டுமென்பதே அவரது பயிற்சி முறையின் நோக்கம். துன்புறவும் தாழ்த்தப்படவும் கிடைக்கும் தருணங்கள் மிகப் பயனுள்ளவை எனக் கருதினார். ஆதலால் அல்லவா 1901 ஏப்ரல் முதலாம் நாள் தம் ஞானத் தந்தைக்கு இவ்வாறு எழுதினார். அன்புத் தந்தையே, என் குற்றங்குறைகளைத் தெரிவித்துக் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன், திருத்தப்படும்போது எவ்வித கஷ்டமும் உணர்ந்ததாக ஞாபகமில்லை. நல்ல மகிழ்ச்சி தான்.

செப வாழ்வில் அவர் அடைந்த முன்னேற்றத்திற்கும் அதனால் வந்த பயனுக்கும் அவரது கடிதங்கள் சாட்சியம் பகருகின்றன. அவர் இவ்வாறு எழுதுகின்றார். "என் தந்தையே தியானத்தினால் என் ஆன்மா மிகுந்த பலனடைகின்றது. பெரும்பாலும் தியான நேரத்தில் தான் ஆசாபாசங்களை அடக்கவும் அவைகளை எதிர்க்கவும் வழிகளை ஓரளவு கண்டுணர முடிகிறது. உறுதியான நல்ல உணர்வுகளும், தீர்மானங்களும் பேறுபெற்ற இத்தனிமையின் போது எனக்குக் கிடைக்கின்றன. தியானம் சரிவரச் செய்யாத நாளில் ஒன்றுமே செய்யாதது போல் தென்படுகிறது." இத்துணை ஆர்வம் கொண்டிருந்த இவ்வான்மா மனித பலவீனங்களுடனும், வெறுப்புகளுடனும் போராட வேண்டியிருந்ததில்லை என நினைக்காலாகாது. அவரது துன்பங்களிலும் போராட்டங்களிலும் சிலுவையில் தொங்கும் யேசுவை உற்று நோக்கி ஆறுதலும் திடனும் அடைந்தார். "தந்தையே, இயேசுவின் பாடுபட்ட சொரூபத்தை உற்றுப் பார்த்து மன்றாடுவதும் கண்ணீர் சிந்துவதுமே எனது ஏக ஆறுதல்" என 1901 செப்டம்பர் 17 ஆம் நாள் எழுதுகின்றார்.

சுமார் 20 ஆண்டுகள் ஆயர் மேனாச்சேரி ஆண்டகை எவுப்பிராசியம்மாளுக்கு ஞான வழி காட்டியிருந்தார். உறுதியான பாதையின் வழி அவளை நடத்திச் செல்ல அவரும் தவறவில்லை. தேவைக்கேற்ப அவளைத் தாழ்மைப்படுத்தவும் அவர் தயங்கவில்லை. மகிழ்ச்சியுடன் அவை யனைத்தையும் வரவேற்று அவளும் மிக்கப் பயனடைந்தாள். அவள் எழுதுகின்றாள். தந்தைக்குரிய உரிமையுடனும் அன்புடனும் என்னைக் கண்டித்துத்திருத்துவதைப் பார்க்கும்போது மகளுக்குரிய எனது சின்ன இதயம் மிகவும் மகிழ்கின்றது. நன்றி கூறுகிறது.

எவுப்பிராசியம்மாள் தன் ஞானத் தந்தைக்கு எழுதின பல கடிதங்களில், மறு உலகிலிருந்து அவருக்குக் கிடைத்த பல வெளிபாடுகளையும் காட்சிகளையும் குறிப்பிட்டுள்ளார். தாழ்மையோடும் நேர்மையோடும் அனைத்தையும் வெளிப் படுத்துகின்றார். ஆயரின் வழிகாட்டுதல் சுய ஏமாற்றத்திற்கு இடங்கொடாமல், உண்மையின் பாதையிலிருந்து விலகாமல் அவரைக் காப்பாற்றியது. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நல்ல ஆட்டுக்கு ஆயர் மேனாச்சேரி ஆண்டகை உண்மையில் கடவுளால் குறிக்கப்பட்ட நல்லாயனாக இருந்தார்.

## 7. செபிக்கின்ற தாயார்

செபமென்னும் அச்சாணியில் சுழன்று கொண்டிருந்தது எவுப்பிராசியம்மாளின் வாழ்க்கை. இளமையிலிருந்தே இச்செபப் பற்றை அவரது வாழ்க்கையில் காண்கிறோம். இக்கட்டு இடையூறுகள் மத்தியில், சோதனை துன்ப வேளைகளில் ஒளியும் திடனும் பெற அவர் கையாண்ட வழி செபமே, துறவறத்தில் அவரது இச்செபப்பற்று செழித்து வளர்ந்தது. கார்மேல் சபையின் தந்தையாகிய எலியாஸ் இறைவாக்கினரைப் போல் உயிருள்ள இறைவனின் திருமுன் நிற்கிறேன் என நிரந்தரம் அவரால் சொல்லக் கூடுமாயிருந்தது.

செபமே அவரது உணவு எனலாம். ஆலயத்திலென்றாலும் அறையில் என்றாலும் நிரந்தரம் தியானத்தில் மூழ்கியவராய் காணப்பட்டார். எப்போதும் கண்களைத் தாழ்த்தி இறைப் பிரசன்ன உணர்வுடன் நடமாடுவதாக அவர் காணப்பட்டார் என ஒரு சகோதரி சாட்சி கூறுகின்றார். அவர் முழுமையாய் இறைப்பிரசன்னத்தில் வாழ்ந்து வந்ததால் எப்போதும் அமைதியும் மகிழ்ச்சியும் தவழும் முகத்தோற்றத்துடன் காட்சியளித்தார் என்கிறார் மற்றொரு சகோதரி.

அவரது செபப்பற்று இயல்பிலே தானாக உருவானது என நினைக்காலாகாது. இறையருளுடன் ஆர்வமுடன் ஒத்துழைத்தார். அவரது செப வாழ்வை உறுதிப்படுத்திய இரு பண்புகள் மௌனமும் தனிமையும் குறிப்பாக இறைப் பிரசன்ன உணர்வில் ஊன்றியிருக்க நிரந்தரம் முயற்சித்தார். நாளடைவில் அது அவருக்கு இயல்பாயிற்று. 1902 ஜனவரி முதல் நாளில் தம் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார். மௌனம் அனுசரிக்கவும், இறைப் பிரசன்ன உணர்வை காப்பாற்றவும் எத்தனை அலுவல்களிலிருந்தும் இறையருளால் எனக்கு எவ்வித கடினமுமில்லை.

இரவு வெகுநேரம் செபத்தில் செலவழிப்பார். யேசுவின் திரு இருதயத்தின் அல்லது மரியன்னையின் சுரூபத்துக்கு முன் அவர் கோலூன்றி முழங்காலிலிருப்பதை அடிக்கடி காணலாம். படுத்திருக்கும்போதும் சிலுவையை கையில் பிடித்துத் தியானிப்பதையும் அழுகிறதையும் அதே அறையில் படுத்திருக்கும் சகோதரிகள் கண்டிருக்கின்றனர். அவரும் தம் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார். இப்போது தனிமையாயிருப்பதற்கு அவ்வளவு நேரம் கிடைக்காவிட்டாலும், கிடைக்கும் நேரமனைத்தையும் என் திவ்விய யேசுவுடன் என் பாவத்திற்குப் பரிகாரம் செய்வதில் செலவழிக்கிறேன். இறைப் பிரசன்ன அனுபவத்தை சில வேளைகளில் அவர் புலன்களால் உணர்ந்திருந்ததாக நினைக்க இடமுண்டு. 1912 ஜூன் முதல் நாளில் தம் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார். நான்கு மாதங்களாக ஒரு விஷயம் என்னில் உணருகிறது. நான் என்ன அலுவல் அல்லது உரையாடலில் ஈடுபட்டிருப்பினும், ஒரு போதும் விட்டகலாமல் ஒருவர் என் இதயத்தில் மிகுந்த அன்புடன் பேசுகின்றார். ஒருவரை என் புத்தியில் தெளிவாகக் காண்கிறேன். சில வேளைகளில் நான் பெரிய முட்டாளாகி விடுகிறேன், ஏனெனில் நான் ஏதாவது பேசும்போதும் செயல் புரியும்போதும் என்னை அறியாமலே எவரோ என் புத்தியை இதயத்தின் ஆழத்துக்குள் இழுக்கிறது போல் உணர்கிறேன், அதனால் பேசுகின்ற, செய்கின்ற விஷயத்தை மறந்து விடுகின்றேன். சில வேளைகளில் தந்தையே, உங்கள் முன்னிலையிலும் இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

இறைவனோடு அதிகமதிகம் ஒன்றுபட அவருள் பற்றி எரியும் ஆர்வம் ஒருபுறம் அவரைச் செபத்துக்கு உந்திச் சென்றது. மறுபுறம் பிறருக்காகத் தம்மையே செலவழிக்கச் செபம் அவருக்குச் சிறந்ததோர் வழியாக அமைந்தது. தான் ஒரு புனிதையாவதற்கே இறைவன் தன்னைத் துறவறத்துக்கு அழைத் துள்ளார் என்பதை எப்போதும் நினைவில் கொண்டிருந்தார். தம் ஞானத் தந்தைக்கு இவ்வாறு எழுதுகின்றார். ‘என் தந்தையே, ஓர் எண்ணம் இடைவிடாமல் என்னை உறுத்துகின்றது. என்னை விட அறிவிலும் புனிதத்திலும் எவ்வளவோ சிறந்தவர்களை உலகில் விட்டு விட்டு ஒன்றுக்கும் உதவாத, ஒன்றுமில்லாமையான என்னை இப்பேறு பெற்ற வாழ்க்கைக்கு இறைவன் அழைத்திருப்பது நான் ஒரு நல்ல வாழ்க்கை வாழ வேண்டுமென்பதற்கு மட்டுமன்று, மாறாக நிறைவு பெற்று புனிதையாவதற்கே என்பது தான் அந்த எண்ணம். ஆனால் என் குளிர்ந்த வாழ்க்கையைப் பற்றி நினைக்கும்போது மிகுந்த வருத்தமடைகிறேன்.’

பிறருக்காகச் செபிப்பதில் எவுப்பிராசியம்மாள் தனி ஆர்வம் காட்டினார். தேர்வு நெருங்கும் போது பள்ளிப் பிள்ளைகள் அவரது செப உதவியை நாடுவது வழக்கம். எவுப்பிராசியம்மாள் தங்களுக்காகச் செபிக்கின்றார் எனத் தெரிய வந்தால் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை. அன்று ஒல்லூர் பள்ளியில் மாணவியாயிருந்த சகோதரி கொன்சொலாத்தா தன் அனுபவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார். படிப்பில் மிகப் பின்தங்கியவள் நான். குறிப்பாகக் கணிதத்தில், ஆயினும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தேன்; தேர்வும் நெருங்கி விட்டது; மூளையில் எதுவும் பதிந்த பாடில்லை; எவுப்பிராசியம்மாள் எனக்காக மன்றாடுகின்றார் என்ற ஒரு ஆறுதல் மட்டும்;அவரது ஆசி பெற்று தேர்வெழுதப் போனேன். எல்லாம் கடினமாயிருந்தன; கணிதத்தின் காரியம் சொல்லவும் வேண்டுமா! தேர்வெழுதி முடிந்ததும் ஆசிரியை ஒருவர் என் பதில்களைப் பற்றிக் கேட்டறிந்தார். மதிப்பெண்களையும் திட்டப் படுத்தினார். சந்தேகமறத் தோல்வி, திண்ணமாகக் கூறினார். என் நெஞ்சம் உடைந்தது. அழுகையுடன் எவுப்பிராசியம்மாளை அண்டினேன். மகளே, நீ வெற்றி பெறுவாய், பயப்படாதே. ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார். தேர்வின் முடிவு வெளி வந்தது. எனக்கு வெற்றி கிடைத்தது. தாயாரின் செபமென்றே அதற்குக் காரணம் என நம்புகிறேன்.

நாளடைவில் முதியோர்களும் இவரது செப உதவியை நாடி வரத் தொடங்கினர். இவரது செபத்தின் வல்லமை அனுபவம் மூலம் கண்டறிந்தமக்கள் கூட்டம் தொலைவிலிருந்தும் வரத்தொடங்கினர். உயிரோடிருப்பவர்கள் மட்டுமன்றி இறந்தவர்களும் வந்தார்கள். உத்தரிக்கும் இடத்திலிருந்து விடுதலை பெற பலமுறை ஆன்மாக்கள் இவரது செப உதவியை நாடி வந்ததற்குச் சான்றுகள் உள்ளன.



எவுபிராசியம்மாளை உயிரோடிருக்கும்போது கண்டு பழகினவர்களின் உள்ளங்களில் பதிந்திருக்கும் உருவம் ஒன்றுண்டு. கோவிலின் ஒரு மூலையில் அமர்ந்திருந்து செபிக்கும் சகோதரி, எப்போதும் செபமாலை சொல்லும் சகோதரி, நாளடைவில் மக்கள் அவரைச் செபிக்கின்ற தாயார் என அழைத்து வரலாயினர்.

## 8. நற்கருணையும் செபமாலையும்

திவ்விய நற்கருணை முன் அமைதியுடன் அமர்ந்திருத்தல் எவுபிராசியம்மாளின் சிறப்புப் பக்தி முயற்சி. அதில் மிகுந்த ஆறுதலையும் கண்டார். தினமும் வெகு நேரம் அவர் நற்கருணை முன் செலவழிப்பதையும் சில நேரம் நற்கருணை நாதருடன் நேர்முகமாக உரையாடுவதையும் சகோதரிகள் கவனித்திருக்கின்றனர். நற்கருணைப் பேழைக்கு முன் அமைதியாகச் செபத்தில் ஆழ்ந்திக்கும்போது நேரம் கடந்துப் போவதை கவனிக்க மாட்டார். ஆருயிர் நண்பனோடொன்றார் போல் நற்கருணை நாதருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். தன் தேவைகள், சிக்கல்களனைத்திற்கும் யோசனை தேடி அவரிடமே ஓடுவார்.

எவுபிராசியம்மாள் கன்னியர் இல்ல தலைவியாயிருந்த போது ஒருநாள் சகோதரியொருவர் மரணத்தருவாயிலிருந்தார். சூழ்ந்து நின்றவர்கள் அவருக்குதவி புரிவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். மரணப் போராட்டம் வெகுநேரம் நீடித்தது. எதிர்பார்த்தவாறு முடிவு வரவில்லை. அனுபவம் வாய்ந்தவர்கள் ஏன் என்று வியப்புற்று ஒருவரையொருவர் நோக்கினர். ஒன்றுமே புரியவில்லை. எவுபிராசியம்மாள் விரைந்தார் ஆலயத்துக்கு. சிறிது நேரம் நற்கருணை நாதருடன் உரையாடின பின் நோயாளியிடம் திரும்பினார். அவரிடம் சிறிது தனிமையில் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் மற்றனைவரும் அறையை விட்டு வெளியேறினர். நோயாளியிடம், யாருடனாவது மனக்கசப்பு இருக்கிறதா, மன்னிப்புப் பெற விரும்புகிறீரா என்று அன்புடன் ஆராய்ந்தார். அச்சகோதரியின் கண்களில் நீர் ததும்பின. முன்னொரு நாள் ஒரு கன்னியர் இல்லத் தலைவியிடம் கொடூரமாக நடந்து அவருக்கு மிக்க மனத் துயரத்தை வருவித்ததாகவும் அதற்காக இந்நாள் வரையிலும் மன்னிப்புக் கேட்டதில்லையென்றும் கூறி அழுதாள். இன்று தொலைவிலுள்ள மடத்திலிருக்கும் அவரிடம் தன் பெயரால் மன்னிப்பு கோரி கடிதம் ஒன்று எழுதியனுப்ப வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டாள். தாயார் உடனே அப்படியே எழுதி ஒருவரிடம் கொடுத்தனுப்பினார். போனவர் அம்மடம் போய் சேருமுன், நோயாளி எவுபிராசியம்மாளின் கரங்களில் அமைதியுடன் உயிர் விட்டார். பார்த்து நின்றவர்களின் உள்ளங்கள் உணர்ச்சி வசப்பட்டன. இந்நிகழ்ச்சியை

நேரில் கண்ட சகோதரி பியாட்ரிஸ் அதே உணர்ச்சியுடன் இதை எடுத்துரைக்கின்றார்.

தினமும் திவ்விய நற்கருணை உட்கொள்ள எவுபிராசியம்மாள் கவனம் செலுத்தி வந்தார். அப்படி முடியாமற் போன சில வேளைகளில் புதுமையான முறையில் திருப்பலியில் பங்கு பெறவும் நற்கருணை பெறவும் தம்மால் முடிந்ததாக் கூறியுள்ளார். நற்கருணை வாங்கும் முன் மிகக் கவனத்துடன் அதற்காக தகுந்த ஆயத்தம் செய்வார். புனித வாழ்க்கையைக் கடைபிடித்து அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது தவிர வழக்கமாக சில தனிப்பக்தி முயற்சிகளையும் அதற்கென மேற்கொள்ளுவார். நற்கணை வாங்குமுன் தான் சொல்லி வந்த உருக்கமான சிறு செபங்களைப் பிறருக்கும் கற்றுக் கொடுத்தார்.

ஒருநாள் எவுபிராசியம்மாளுக்கு நற்கருணைப் பேழையைப் பூட்டி சாவியை எடுக்கத் தேவை ஏற்பட்டது. குருவானவரைத் தவிர வேறு எவரும் நற்கருணைப் பேழையைத் திறக்கவோ, பூட்டவோ அனுமதியில்லாதிருந்த அந்நாட்களில் அதன் காரணமாக தமக்கேற்பட்ட மனக் குழப்பத்தை அவரே எடுத்துரைக்கின்றார்.

ஒருநாள் குருவானவர் நற்கருணைப் பேழையைப் பூட்ட மறந்து விட்டார். காலையில் தியான நேரம் யாரோ பேழையைப் பூட்டி சாவியை எடு எனப் பலமுறை கூறுவது போல் உணர்ந்தேன். என்னமோ வீண் நினைவு என அசட்டைப் பண்ணினேன். தியான நேரம் முடிந்து அனைவரும் ஆலயத்தை விட்டு வெளியேறியதும் சற்றுக் கவலையுடன் பேழையருகே சென்று பார்த்தேன். சாவி அதன் மேல் இருக்கிறது. குருவானவர் பூட்டி வைத்திருப்பார் என நினைத்தேன். ஆனால் சாவி மேல் கை வைத்ததும் கதவு திறந்தது. எனக்கு ஏற்பட்ட கவலை என்னவென்று சொல்வது. என்ன செய்வதென தெரியாமல் அங்கேயே முழந்தாளிட்டு மன்றாடினேன். அப்போது அன்பும் இரக்கமும் நிறைந்த குரலொன்று கேட்டேன். என் மகளே எவுபிராசியா ஏன் இவ்வளவு கலங்குகிறாய்? நான் உனது விண்ணக மணமகனல்லவா? பயப்படாதே. எழுந்து உன் மணமகனின் அரவணைப்பைப் பெற்று பேழையை பூட்டி விடு. அந்நேரம் பேழையிலிருந்து கதிரவன் தோன்றினாற்போல் ஒளிக் கதிர்கள் புறப்படக் கண்டேன். துயரத்துடனும் நடுக்கத்துடனும் என் அன்பு மணமகனை ஒரு பெட்டிக்குள் வைத்து பூட்ட வேண்டுமே என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, என் நேச மணமகளே விரைவில் என்னிடம் வாரும் என ஆண்டவர் அருள் கூர்ந்தார். நான் எழுந்து அருகில் சென்றேன். சாவியில் கை வைத்ததும், ஏன் கவலைப்படுகிறாய், என் அன்பே என்று நீ அழைக்கும் உன் மணமகன் உன்னை அரவணைக்க ஆயத்தமாய் இருக்கின்றார். கதவைப் பூட்டி விட்டுப் போகலாம் என்றருள் கூர்ந்தார். அத்துடன் தன் ஆசியை எனக்கு வழங்கினார். அதைப்பெற்று கதவை பூட்டி விட்டு அறைக்குத் திரும்பினேன்.

(1905 செப்டம்பர் 9)

ஆலயத்தின் ஒரு மூலையில் சூழ்நிலைகளை மறந்து செபத்தில் ஆழ்ந்திருக்கும் எவுபிராசியம்மாளின் கண்கள் இரு மையங்களை மாறி மாறிக் கவனித்த வண்ணம் இருந்தன. ஒன்று நற்கருணைப் பேழை, மற்றொன்று மரியன்னையின் உருவம். மரியன்னை மீது இளமையிலேயே இவருக்கு பக்தியும், பாசமும் துளிர்விட்டு வளர்ந்திருந்தது. தேவதாய் இவருக்கு உண்மையில் முற்றிலும் தாயாக அமைந்திருந்தார். மகளைப் போல் அத்தாயை அன்பு செய்தார். எவுபிராசியம்மாளுடன் வாழ்ந்த சகோதரி அசீசி கூறுகின்றார். உள்விடுதி நாட்கள் துவங்கி பதினைந்து வருடங்கள் ஒல்லூர் மடத்தில் இருந்திருக்கிறேன். எவுபிராசியம்மாளுடன் நெருங்கிப் பழகியுள்ளேன். எனக்கு உயரம் அதிகம் உள்ளதால் பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள அமல அன்னையின் சொரூபம் துடைத்து சுத்தம் செய்ய நான் மேலே ஏறுவது வழக்கம். தாயார் ஓர் மூலையில் செபித்துக் கொண்டிருப்பார். மாதாவைப் பார்த்து சில போது புன்முறுவல் கொள்வதைக் காணலாம். நான் கீழே இறங்கினதும் என்னைக் கூப்பிடுவார் கட்டியணைத்த வண்ணம் மாதா பிள்ளையிடம் என்ன சொன்னார். நீ மாதாவிடம் என்னவோ சொல்லுகிறதை நான் கேட்டேனே. என்ன சொன்னாய்? என்று என்னிடம் கேட்பார். ஒரு சிறு குழந்தையைப் போல், குழந்தையிடம் என்றார் போல், இவ்வாறு கேள்விகள் கேட்பது தாயாரின் வழக்கம்.

செபமாலை எவுபிராசியம்மாளின் சிறந்த பொக்கிஷம். அவரது சோதனைகளில் நம்பிக்கையும் செபத்துக்கு ஆற்றலும் ஊட்டும் கருவியாக அமைந்தது. இரவும் பகலும் ஆலயத்திலும் வெளியிலும் அவர் செபமாலை செபித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம் தன் இக்கட்டு வேளைகளிலெல்லாம் உதவி தேடி தாயிடம் அன்போடு ஓடுவார். இறைவனின் அன்னையாம் அமலி கன்னி மரியாளை மூவுலக அரசியாக வாழ்த்துகிறேன் என்னும் மனவல்லியச் செபம் அவருடைய உதடுகளின்று இடைவிடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். பிறரும் இச்செபத்தை அடிக்கடி சொல்லும்படி அறிவுறுத்துவார்.

கன்னித்தாயும் தாய்க்குரிய அன்புப் பற்றுதலுடன் அவருக்கு ஆறுதலும் திடனும் அளித்து ஊக்குவித்து வந்தார். பாவிகளுக்காகவும் திருச்சபைக்காகவும் செபிக்கும்படி அவருக்கு வலியுறுத்துவார். 1905 ஜூன் திங்கள் முதல் நாளில் எவுபிராசியம்மாள் தம் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார். ஒருமுறை தேவ அன்னை தம் திருமகன் பாவிகளிடமிருந்து பெறும் துயரத்தைக் கண்டு வருந்துகிறார் என்றும்,

மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் மக்கள், கூட்டமாக நற்கருணை அருந்தி தம் திருமகனுக்குப் பரிகாரமாக ஒப்புக் கொடுப்பது ஆறுதலளிக்குமென்றும் கூறினார்.

பிறருக்காகப் பரிந்து மன்றாடுவதில் எவுபிராசியம்மாள் வெகு நேரம் செலவழிப்பார். உத்தரிக்கும் ஆன்மாக்களுக்கு உதவி புரிவதில் தனி ஆர்வம் காட்டினார். அதற்காகச் செபமாலையை எப்பொழுதும் பயன்படுத்தினார். இதைப் பற்றி ஒரு சகோதரி கூறுகின்றார். எவுபிராசியம்மாளுக்கு இரவில் தூக்கமில்லையென்று கூறலாம். கோவில் கதவு அடைக்கப்பட்ட பின்னும் வராந்தாவில் செபமாலை செபித்துக்கொண்டு உலாவுவார். அவர் எப்போது அறையில் வந்து படுக்கிறார் என்று அதே அறையில் படுத்திருக்கும் நாங்கள் அறிவதில்லை. சிறிது நேரம் இளைப்பாறின பின் திரும்பவும் செபமாலை துவங்குவார். சில நாட்களுக்குப் பின் விஷயம் புரிந்து கொண்டேன். உத்தரிக்கும் ஆன்மாக்கள் அவர் செபிக்கும் செப மாலைக்காக அவரருகில் காத்து நிற்கும்போது அவரால் எவ்வாறு தூங்க முடியும்! வசதியிருக்கும் போது நானும் அவருடன் செபமாலையில் பங்கு பெறுவேன். எனது பயமும் குறைந்தது. ஒருமுறை செபமாலை வேளையில் அவர் திகைத்து நிற்பதைக் கவனிக்கலானேன். காரணம் கேட்டபோது மகளே உத்தரிக்கும் ஆன்மாக்கள் செபமாலையை எதிர்பார்த்து இங்கே நிரம்பி நிற்கின்றனர் என பதிலளித்தார். அந்நாட்களில் என் அம்மா இறந்து போனார். ஒருநாள் நான் பக்தியின்றி அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு செபமாலை சொல்லிக் கொண்டிருந்தேன். எவுபிராசியம்மாள் என்னை கூப்பிட்டு, இதோ உன் தாய் இங்கே நிற்கிறாள் எனக் கூறினார். உடனே நான் முழந்தாளிட்டு பக்தியுடனே செபமாலையைத் தொடர்ந்து செபித்தேன். என் குடும்பத்தில் இறந்துபோன வேறு பலரும் அவரிடம் வந்திருக்கின்றனர். அவர் செபமாலை சொல்லும் வேளைகளில் எப்போதும் ஆன்மாக்கள் அவர் அருகில் நிற்பதாக உணர்ந்திருக்கின்றேன். இவ்வாறு பல விஷயங்கள் அவரது அறையில் படுத்திருக்கும் நாட்களில் அறிய வந்துள்ளேன். முதலில் பயமடைந்தேன். ஆனால் போகப் போக பயம் மாறிப்போனது.

தாமே புனித வாழ்வில் ஓங்கி வளரவும் பிறருக்கு ஆன்ம நலன்களை வருவிக்கவும் நற்கருணைப் பக்தியும் செபமாலைப் பக்தியும் எவுபிராசியம்மாளுக்குச் சிறந்த வழிவகைகளாக அமைந்தன.

## 9. தாழ்ச்சியும் பிறரன்பும்

தாழ்ச்சியின் உறுதியான அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட்டது எவுபிராசியம்மாளின் புனித வாழ்க்கை. அது மேலே வளர வளர அவரது தாழ்ச்சியும் ஆழத்தில் வேர்விட்டு வலுப்பெற்றது. எளிய,



மறைந்த வாழ்க்கையைத் துவக்கத்திலிருந்தே ஆவலுடன் விரும்பித் தேடினார். பதவிகளும், ஆடம்பரங்களும் அவருக்கு கசப்பையே கொடுத்தன. ஒல்லூர் மடத்தின் தலைவியாக நியமிக்கப்பெற்ற போது தம் ஞானத் தந்தைக்கு எழுதினார். தந்தையே உண்மையை சொல்லப் போனால் எங்கேயாவது காட்டிற்குள் போய் வாழ்ந்திருந்தால் எவருக்கும் தெரியாமல் இம்மை வாழ்க்கையை நடத்தியிருக்கலாம் என்ற எண்ணம் வருகின்றது.... என்னை விட இறைவனுக்குரியவர்கள் இங்கே உள்ளனரே.

தாழ்ச்சியை பயிற்சி செய்ய, வாய்க்கும் தருணங்களை மனமுவந்து பயன்படுத்தினார். அவர் தலைவியாக நியமிக்கப் பட்டதும், தன் பொறுப்பனைத்தையும் யேசுவின் திரு இருதயத்திடம் ஒப்படைக்கும் கருத்துடன், மடத்தின் முக்கியமாக ஓர் இடத்தில் சுவரில் துவாரம் உண்டுபண்ணி யேசுவின் திரு இருதயத்தின் அழகிய உருவமொன்றை அங்கே நிறுவினார். சில நாட்களுக்குப் பின் மடம் சந்திக்க வந்த ஆயரவர்கள் இயல்பிலே பலம் குன்றிய சுவரை உடைத்ததில் காட்டின விமரிசையின்மையை எடுத்துக் கூறி குழுவின் நடுவில் கடுமையாக அவரைக் கண்டித்தார். கேட்ட அனைவரும் திகைத்து நின்றனர். தாயாரோவெனில் எந்த வித சாக்குப் போக்கும் சொல்லாமல் ஆயரின் பாதத் தண்டையில் முழந்தாளிட்டு தன் குற்றத்தை ஏற்று மன்னிப்புக் கேட்டார். இது வெறும் வெளிக்காட்டுதலாயிராமல் உள்ளப்பற்றுதலுடன் இவ்வாறு செய்து வந்தார் என்பதற்குத் தன் ஞானத் தந்தைக்கு வரைந்த பின் வரும் மொழிகளே சான்று. தந்தைக்குரிய உரிமையுடனும், அன்புடனும் என் குறைகளைச் சொல்லி அறிவுரை எடுத்துரைப்பதைக் கேட்கும்போது மகளுக்கு அந்த சிறு இதயம் மகிழ்ச்சி அடைகிறது, நன்றி நவில்கின்றது.

தன்னையும் தன் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டவர்களையும் பேயின் சூழ்ச்சிகளிலிருந்து விடுவிக்க அவர் மேற்கொண்ட சிறந்த வழி தாழ்ச்சி. நவ கன்னிகை ஒருவர் தன் குற்றங்குறைகளில் பிடிவாதமாக நிலைத்து நின்றாள். எவுபிராசியம்மாள் பலமுறை அவளுக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் கூறியும் எந்தப் பயனும் விளையவில்லை. மாறாக அவள் தன் ஆசிரியையிடம் வெறுப்பும் கசப்பும் காட்டி மகிழ்ச்சி யின்றி நடமாடினாள்.அவளை மனம் மாற்ற தகுந்த வழி காண்பிக்கும்படி ஆண்டவரிடமும் கன்னித் தாயிடமும் உருக்கமுடன் வேண்டினார். தாழ்ச்சியின்மையே இதற்கு முக்கிய காரணம் என உணர்ந்து கொண்டார். இதற்கு மருந்து தன்னையே தாழ்த்துதல் என ஆண்டவரிடமிருந்தும் கன்னித்தாயிடமிருந்தும் புரிந்து கொண்டார். சற்றும் தயங்கவில்லை. நவத்துறவிகளை ஒன்று கூட்டி குற்றவாளியை ஒரு நாற்காலியில் அமர வைத்தார். அவளது பாதத்தருகே முழந்தாளிட்டு அவளுடைய பாதங்களை முத்தி செய்து இறைவனை நினைத்து ஆகங்காரத்தினிமித்தம், தான்

செய்த குற்றங்களனைத்தையும் மன்னிக்க வேண்டுமென்றும், இனி முதற்கொண்டு தாழ்மையுடன் தலைவர்களுக்குப் பணிந்து வாழ்வேன் என்றும் பணிந்து கூறி எழுந்து சென்றார். குற்றவாளியில் உடனே மாற்றமெதுவும் வெளிப்படவில்லை. ஆனால் மறுநாள் காலையில் அவர் சொல்லொண்ணாத் துயரத்துடன் எவுபிராசியம்மாளின் பாதத்தில் விழுந்து சிறு குழந்தையைப் போல் ஏங்கி அழுதாள். கேட்காமலே தன் மனக் கலக்கங்கள் சோதனைகளனைத்தையும் வெளிப்படுத்தினார். அத்துடன் தன் தலையிலிருந்து ஏதோ ஒரு சுமை இறங்கிய மன அமைதியும், மகிழ்ச்சியும் கொள்வதாக அறிவித்தாள். தாயாரோ அவளை அரவணைத்து, மகளே, உன்னோடன்று, உன்னைக் கலக்கின பேயிடமே நான் அவ்வாறு செய்தேன், நாம் அவனை வெட்கமுறச் செய்வோம், அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியாயிரு என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார். தான் ஒன்றுமில்லை என்று எவுப்புராசியம்மாள் தன்னைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம் அவரது சொல், செயல் அனைத்திலும் வெளிப்பட்டது. மிகத் தாழ்மையான வேலைகளைச் செய்வதில் எப்போதும் ஆர்வம் காட்டினார். மடத்தில் எங்கேயாவது சுத்தமின்றி இருப்பதைக் கண்டால் அதைச் சுத்தம் செய்ய அனைவருக்கும் முன் விரைந்து செல்வார். சகோதரிகள் அனைவரும் வகுப்புகளுக்குப் போனதும், துடைப்பம் கையிலேந்தி சுற்றித் திரிவார். குளியலறை, கழிவறைகள் போன்றவை சுத்தம் செய்வதில் தனி ஆர்வம் காட்டினார்.

செல்வக் குடும்பத்தில் பிறந்து இளமையில் செல்வக் கொழுப்பால் வாழ்ந்தவர் எவுப்பிராசியம்மாள். ஆனால் நாளடைவில் மாறின. சூழ்நிலைகளில் அவரது குடும்பம் வறுமையுற்று வாடினது. தன் இரு சகோதரர்கள் பிழைப்புக்கு வழியின்றி பிறரை நாடும் கதி நேரிட்டது. அவர்களின் துயர நிலையைக் கண்டு மனம் வருந்தினார். ஆயினும் மனங் கசப்படையவில்லை. இம்மைப் பொருட்கள் குறைந்து விடினும் ஞானச் செல்வத்தில் யாரும் பின் தங்கலாகாதென அறிவுரை கூறுவார். தன் குடும்பத்தினரின் வறுமை நிலைமையை பிறருக்கும் எடுத்துரைத்து தன்னையே தாழ்த்திக் கொள்ள இச்சூழ்நிலையைப் பயன்படுத்தினார்.

தன்னைத் தாழ்த்துமளவுக்குப் பிறரை உயர்த்தவும், அவர்களுக்குப் பணிபுரியவும் எவுபிராசியம்மாள் முனைந்து நின்றார். பிறருக்கு முதலிடம் என்பதே அவர் போதித்தும் சாதித்தும் வந்த அடிப்படைப் பிறரன்பு ஒழுங்கு. பிறருடைய தேவைகளை முன்கூட்டியே கண்டுணர்ந்து உதவி புரிய விழிப்பாயிருப்பார். குறிப்பாக களைப்புற்றோர், துன்புறுவோர் மட்டில் தனிப்பற்றும் பாசமும் வெளிப்படுத்துவார். நல்ல உணவுப் பொருள் ஏதாவது கிடைக்கும்போது மிகவும் களைப்புற்றிருக்கும் சகோதரியைத் தேடிப்பிடித்து அவருக்கு அதைக் கொடுப்பார். யாராவது முக வாட்டமாயிருப்பதைக் கண்டால் அவருடைய இதயமும் உடன் வாடும்.



பிறருடைய கவலைகளைத் துன்பங்களைத் தானாகவே கண்டுணரும் தனி ஆற்றல் கொண்டிருந்தார். சகோதரி பனீன கூறுகின்றார். நான் சென்னையில் படித்துக் கொண்டிருக்கும் காலம் விடுமுறை நாட்களில் ஒல்லூர் மடத்துக்குச் சென்றேன். என் மனதிலோ கடுமையான போராட்டம். யாரிடமும் திறந்து சொல்லவும் முடியாத நிலைமை. என்ன செய்வதெனத் தெரியாமல் தவித்தேன். ஒருநாள் கோவிலை நோக்கி நடந்துக் கொண்டிருந்தேன். எதிரே வந்த எவுபிராசியம்மாள் என்னை அணுகி இரக்கமுடன் தன் பக்கம் அழைத்து, பிள்ளாய் கவலைப் படாதே, எல்லாம் நன்றாக முடியும் நான் செபிக்கிறேன் என்று கூறி அன்புடன் என்னை தடவி விட்டுச் சென்றார். அன்றிலிருந்து என் வாழ்க்கையில் ஒரு புதுத் திருப்பத்தை உணர்ந்தேன். என் பிரச்சினைகள் தானாகவே மறைந்தன. நான் யாருக்குமே வெளிப்படுத்தாத என் இதய இரகசியம் தாயார் எவ்வாறு புரிந்துகொண்டார் அவர் கூறின இரண்டு இரக்க வார்த்தைகள் மலைபோல் தோன்றின. என் பிரச்சனைகளை எப்படி நிழல்போல் மறையச் செய்தன என்பது இன்றும் எனக்கு புரியாத புதிர். இது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியன்று, இதுபோன்ற அனுபவங்கள் வேறு பலரும் கொண்டிருக்கின்றனர்.

கடுமையான வேலைகளை ஏற்றுக் கொள்வதற்கு உடல் நலக்குறைவு எவுபிராசியம்மாளை அனுமதிக்கவில்லை. ஆயினும் சிறுசிறு விஷயங்களில் பிறருக்குத் தன்னாலான உதவி புரிய தருணம் தேடிக் கொண்டிருப்பார். திருப்பலிக்குத் தேவையான அப்பங்களைத் தயாரிக்கும்போது, அவ்வேலையில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகளுக்கு உதவி புரிய விரைந்துச் செல்வார். செப மனப்பான்மையுடன் அவர் அவ்வேலையைச் செய்வது பார்ப்பவர்களுக்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் தானாகவே ஏற்படும். அதிக உழைப்புத் தேவைப்படும் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகளிடம் தனிக் கவனம் செலுத்தினார். அதுபோல் தன் உதவி மிகத் தேவையாயிருந்தவர்கள், மன நோயினால் துன்புற்ற ஒரு சகோதரியிடம் பிறர் வெகுவாக நெருங்கிச் செல்ல விரும்பவில்லை. எவுபிராசியம்மாவோ மிகுந்த பொறுமையுடன் அவருடன் நெருங்கிப் பழகி தினமும் அவருடன் நூற்றியன்பத்தி மூன்று மணிச் செபம் சொல்ல முன்வந்தார். நோயாளிகள் மட்டில் அவரது அன்பு அணைபுரண்டோடியது. கோவிலில் அல்லது சொந்த அறையில் அவரைக் காணாத வேளைகளில் அவரைக் காணக் கிடைப்பது நோயுற்றவர்கள் பக்கத்தில் தான். அவர்களைப் பராமரிப்பதில் தனித்திறமை காட்டினார். நோயாளிகளும் அவரது உபசரணையைப் பெறத் தனி விருப்பம் காட்டினார். காச நோயினால் நலிந்து போன சகோதரி ரோஸ்பியாட்ரிஸ் நோய் முற்றினபோது எவுபிராசியம்மாளைப் பார்க்கவும் இவருடைய உபசரணை பெறவும் விருப்பம் தெரிவித்தார். இவரும் விருப்புடன் அவர் தங்கியிருந்த மணலுலீர் மடத்துக்கு

விரைந்து சென்றார். ஐந்து மாதக் காலம் அவரை நன்கு பராமரித்து நல்ல மரணத்துக்கு ஆயத்தப் படுத்தினார். பிறர் உதவி புரிய முன்வரத் தயங்குமிடத்திலும் எவுபிராசியம்மாள் முன் நிற்பார். இரவு பகலென்று பாராமல் தனது நோய் முதுமையையும் பொருட்படுத்தாமல் உதவி புரிய முனைந்து நிற்பார். பிறருக்குப் பணிபுரியக் கிடைக்கும் ஒவ்வொரு தருணமும் ஒரு பொக்கிஷமென்றாற்போல் பேணி வந்தார்.

தாயாரின் ஆர்வமிக்க பிறர் நலப் பணியை விளக்கும் ஒரு நிகழ்ச்சியை நேரில் கண்ட ஒரு சகோதரி கூறுகின்றார். வாந்தி பேதியினால் ஒரு சகோதரி மரணத் தருவாயிலிருந்தார். கொடிய தொற்றுநோய் என்பதால் அருகில் வரவும் பலர் அஞ்சினர். அச்சகோதரியின் தாய், தானும் துயரத்தில் விலகி நின்றார். எவுபிராசியம்மாளோவெனில் மகிழ்ச்சியுடன் ஒரு நிமிடமும் அவரை விட்டுப் பிரியாமல் அவரின் தேவைகளனைத்தையும் கவனித்து உதவி புரிந்தார். அத்துடன் நல் மரணத்துக்கும் அவரை ஆயத்தப்படுத்தினார். அவரது கரங்களில் அச்சகோதரி உயிர் விட்டார். சாவையும் வெல்லுகின்ற பிறரன்பு, மரணத் தருவாயிலிருப்போரை விட்டுப் பிரியாமல், அவருடைய உணர்ச்சிகளைத் தனதாக்கி, அவர்களுக்குச் செபிக்க உதவி புரிந்து ஆறுதலும் திடனும் அளிப்பது அவருக்கு மிகவும் விருப்பமான பிறரன்புப் பணி.

சிறு சிறு செயல்கள் மூலமாக அவரது சுயநலமற்ற பிறரன்பு வெளிப்பட்டது. மின் விளக்குகள் இல்லாத அந்நாட்களில் இரவுச் செபம் முடிந்ததும், எரியும் மெழுகுவர்த்தி கையிலேந்தி சிரமத்துடன் வராந்தாவில் முன்வந்து நிற்பார். படிக்கட்டு ஏறும் சகோதரிகளுக்கு வெளிச்சம் காட்டுவதே அவரது நோக்கம். தான் பெறும் சிறு உதவிகளுக்கும் நன்றி கூறத் தவற மாட்டார். தன் நன்றி உள்ளத்தை சொற்களாலென்பதை விட செயல்களால் வெளிப்படுத்தக் கருத்தாயிருப்பார். தன் கையிலுள்ள எதையும் தன் ஆடைகளைக் கூட பதிலுதவியாக அளிப்பார். பிறருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தாமலிருக்க மிகக் கவனமாயிருப்பார். அதே நேரம் பிறரைப் பற்றி நல்லவை எடுத்துரைக்கவும், பிறருக்குப் பாராட்டும் புகழுரையும் அளிக்கவும் கிடைக்கும் தருணமொன்றையும் தவற விட மாட்டார். எவுபிராசியம்மாளின் இந்தப் பண்புகளை விளக்கும் பற்பல நிகழ்ச்சிகளை சகோதரிகள் இன்றும் உவகையுடன் நினைவு கூறுகின்றனர்.

எவுபிராசியம்மாளின் நடத்தைகளை மதியாத சகோதரிகளும் குழுவிலிராமலில்லை. மறைவாக மட்டுமன்றி தெளிவாகவும் அவரைக் குறை கூறினவர்களும் இருந்தனர். எவுபிராசியம்மாளோ தன்னை மதிப்பவர்கள் வெறுப்பவர்களென்று முகம் பாராமல் அனைவரையும் ஒன்றுபோல் நடத்தினார். மட்டுமன்றி தன்னைத் துன்புறுத்தினவர்களுக்குத் தனிச் சலுகைகள் செய்வதில் இன்பம்



கண்டார். ஒருநாள் அவரது புனித நடத்தை போலியென்றும் செப அனுபவங்கள் ஏமாற்றங்களென்றும் சகோதரிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருப்பதை அவர் கேட்க நேரிட்டது. அக்குழுவுக்குத் தலைமை தாங்கிய சகோதரி துணிகள் தைத்து ஒட்டுப்போட வருவதை எவுபிராசியம்மாள் கண்டபோது மகிழ்ச்சியுடன் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார். இரு சகோதரிகளுக்கிடையே மனத் தாங்கலிருந்தால் வெறுப்பு கொண்டிருப்பவர் மற்றவருடைய பாதம் முத்தி செய்து மன்னிப்புக் கேட்கத் தூண்டுவது அவரது வழக்கம். தம் பொறுப்பிலுள்ளவர்கள் இரவு தூங்க போகுமுன் சமாதானம் செய்து விட்டதாக அவர் நேரில் கண்டறிய விரும்புவார். எவுபிராசியம்மாள் தாமாகவே நடந்து காட்டினதையே பிறருக்கும் போதித்து வந்தார் என்பது அவரை நெருங்கிப் பழகினவர்களின் ஒருமனதான கருத்து.

மடத்தில்பணிபுரியும் வேலைக்காரர்களிடமும் எவுபிராசி யம்மாள் தனி இரக்கம் காட்டி வந்தார். அவர்களுக்கு உதவி புரியவும் ஆறுதல் கூறவும் தருணங்களைக் கண்டுபிடிப்பார். அவர்களுடைய உடைகளைத் தைப்பதிலும் பழுது பார்ப்பதிலும் அவர் காட்டும் அக்கறையைக் கவனிக்கும்போது அதற்கெல்லாம் அவரே பொறுப்பு என நினைக்கத் தோன்றும். யாராவது அவர்களைக் குறை கூறுவதோ வசை கூறுவதோ கண்டால் அவர்களுக்காகப் பரிந்து பேசுவார். எவுபிராசியம்மாளிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்த யுக்காஜீஸ்டா சகோதரி ஒரு மடத்துக்குத் தலைவியாக நியமனம் பெற்றுப்போகும்போது, பிள்ளையே, வேலைக்காரர்களிடம் மிகுந்த இரக்கமுடன் பழக வேண்டும் எந்த விதத்திலாவது அவர்களுக்கு கஷ்டம் துன்பம் வருவிக்கலாகாது என நினைவில் வைத்துக் கொள்ளும் எனக் கூறி அனுப்பினார்.

எவுபிராசியம்மாளிடம் நெருங்கிப் பழகின ஒவ்வொருவரும் கூறுவர். தாயாருக்கு என்னிடம் மிகுந்த அன்பு, மற்ற அனைவரையும் விட என்னையே இவ்வுலகில் அதிக அன்பு செய்தார். இந்தத் தனி அன்பைச் சுவைத்தறிய உதவின சிறு சிறு நிகழ்ச்சிகளை இன்றும் பலர் நினைவில் காப்பாற்றி வருகின்றனர்.

## 10. பாடுகளின் பாதையில்

‘என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்துக் கொண்டு என்னைப் பின் தொடரட்டும்‘ என்னும் யேசுவின் போதனையை முழுமையாகக் கடைபிடித்து வாழ்ந்தவர் எவுபிராசியம்மாள். துறவற வார்த்தைப் பாடுகளையும் கடமைகளையும் குறைய அனுசரித்தலே அவர் பின்பற்றின சிறந்த ஒறுத்தல். புனித வாழ்க்கையில் விரைந்தோட தன்னோடு தானே கடும் பலவந்தம் செய்ய வேண்டியிருந்தது. எவுபிராசியம்மாள் புனிதையாகப் பிறக்கவில்லை.

மனிதப் பலவீனங்கள் அவரையும் ஆட்கொண்டிருந்தன. இயற்கையிலே கோபக்குணம் படைத்தவர். அவரது தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட குணம், இந்தப் பலவீனம் ஒரு சிலர் முரட்டுக் குணம் படைத்தவர் என்று எண்ணி இவரை விட்டகன்று நிற்கவும் குறை கூறவும் தூண்டினார்கள். அவரோ இப்பலவீனத்தையே புனிதத்தில் முன்னேற கருவியாகப் பயன்படுத்தினார். அதை மேற்கொள்ள அவர் எடுத்த முயற்சியையும், பிறர் கண்டு கொண்டனர்.

ஒரு சகோதரி கூறுகின்றார்; எவுபிராசியம்மாளுக்குச் சிறிது கோபக் குணம் உள்ளது. அதை மேற்கொள்ளக் கடும் முயற்சி எடுக்கின்றார் என்பதை எளிதில் காணலாம். கோபம் வரும்போது அவரது குரல் தானே உயரும். உடன் மௌனம் காத்து தலைகுனிந்து நடப்பார். நாளடைவில் தன் இயற்கைக் குணத்தை மேற்கொண்டு விட்டார். அவர் தம் ஞானத் தந்தைக்கு எழுதும் வார்த்தைகள் ஆவன, நவத்துறவு காலத்தில், சிறு விஷயங்களில் தானும் என்னையே சாகடிக்கும் அளவுக்கு அத்தனை கோபமும், கலக்கமும் ஏற்பட்டிருந்தது. சில தருணங்களில் காரணமெதுவுமின்றி என்னோடு தானே கோபம் கொண்டிருக்கிறேன். ஆனால் தந்தையே, இப்போது எதுவுமில்லை. எப்போதும் புன்னகை காட்டும் சகோதரி, இரக்கமும் அன்பும் கொண்ட சகோதரி என்றெல்லாம் பிற்காலத்தில் அவரிடம் பழகினவர்கள் அவரைப் பற்றி கூறி வந்தார்கள்.

நிறைவு பெற முழு ஊக்கத்துடன் முயற்சித்து வந்த எவுபிராசியம்மாள் தனது சிறு குறைகளையும் கனமாக எண்ணி அத்துடன் போர் கொடுத்தார். சோம்பல், அகங்காரம் போன்ற துர்க்குணங்கள் இன்னும் சில வேளையாவது தன்னில் தலைதூக்குவதாக அவரது ஞானத் தந்தைக்குத் தெரிவிக்கின்றார். சிறு தவறுகளுக்கு இதயமுருக மனம் வருந்தினார்.

உணவு, உடை போன்ற தேவைகளில் கடும் ஏழ்மையையும் ஒறுத்தலையும் கடைபிடித்து வந்தார். தனது வசதி நாட்டங்களை எதிர்த்து நிற்பதில் மிக்கக் கவனம் செலுத்தினார். ஒரு சகோதரி கூறுகிறார், எவுபிராசியம்மாள் இயல்பிலே சுவையான உணவுப் பொருட்களையும் இனிப்புப் பண்டங்களையும் விரும்பினவர். ஆனால் நாளடைவில் அப்பற்றுதலை முற்றிலும் விட்டு விட்டு கீழ்த்தரமான உணவுப் பொருட்களை மட்டும், அவைகளைத் தானும் சில நேரத்தில் வேண்டுமென்றே சுவையற்றதாக்கி உண்பதைக் கண்டிருக்கிறேன். கொடிய தாகத்தால் அல்லலுறும்போது உணவு நேரம் வரையிலும் தண்ணீர் குடிக்காமல் காத்திருப்பார். அப்போது தானும் கஞ்சித் தண்ணியில் அதிக உப்பை விட்டு தன் நாட்டத்தை எதிர்ப்பார். பெரும்பாலும் ஒரு நாள் ஒரு பொழுது மட்டும் உணவு கொள்வார். அதுவும் காய்கறி உணவு.



அன்றைய வழக்கத்தின்படி தனக்குத் தேவையானவற்றை தேவைப்படும்போது மட்டும் அதிகாரிகள் முன் முழங்காலிலிருந்துப் பெற்றுக் கொள்வார். அவரது தேவைகளோ மிகச் சொற்பம். பழைய ஒரு ஊதா நிற அங்கி அணிந்து, குடைக்கால் போன்ற ஒரு தடியும் ஊன்றி இங்கும் அங்கும் பாராமல் நடந்துபோகும் அவர் ஒரு எளிய பிச்சைக்காரியைப் போல் தோற்றமளிப்பார். தனது உபயோகத்துக்கான பொருட்களில் நல்லவற்றைப் பிறருக்குக் கொடுப்பார். அது முடியாதபோது அவற்றைத் தாமே கவர்ச்சியற்றதாக மாற்றிக் கொள்வார். குறிப்பாகத் தன் உணவைச் சுவையற்றதாக மாற்ற சூட்சிகளைக் கண்டு பிடிப்பார். இவைகளுக்கெல்லாம் இயற்கை முறையில் விளக்கம் கொடுத்தல் எளிதானது. ஆதலால் தான் எவுபிராசியம்மாளின் நடத்தைகளைப் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் குழுவில் எழும்பலாயின. ஆனால் அவர் தன்னோடு தானே கடும் பலவந்தஞ் செய்து இம்முயற்சிகளை மேற்கொண்டு வந்தார் என்பதற்கு அன்னாரின் வார்த்தைகளே சான்று. தன் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார், தந்தையே, என் இதயத்தின் ஆறுதல் நான் பெரும் புனிதச் செயல்கள் ஒன்றுமே புரியவில்லை என்றாலும், என் மனத்தின் விரும்பங்களுக்கும் ஆசா பாசங்களுக்கும், நான் விரும்பினால் பெறக் கூடுமாயிருந்த இன்பங்களுக்கும்இறையருளால் என்னை நான் கையளித்ததில்லை என்பதாகும். இன்பங்கள் ஈர்க்கும் வேளைகளில், நித்திய பேரின்பத்துக்காக இப்போது இதை விட்டு விடுவோம். பிறகு பார்ப்போம் என்று என்னோடு தானே கூறி என் கீழ் நாட்டங்களை ஏமாற்றுகிறேன். இறுதி வரையிலும் இவ்வாறு நிலைத்திருக்க மன்றாடுங்கள். நான் துறவற உடைபெற்றுக் கொண்ட நாள் முதல் துவங்கின அலுவல் இது. உலக இன்பங்கள் சுவைக்க ஆசையுண்டு. அதற்கான வழிகளையும், அதனால் அடையக் கூடிய திருப்தியையும் நன்கு அறிகிறேன். முடியாததனாலன்று. என் அன்பு இயேசுவுக்கும் பரிசுத்த அன்னைக்கும் வெறுப்புக்கு இடம் கொடாதபடி என் தேவைக்கு மிஞ்சின அனைத்தையும் விலக்குகிறேன். கோபமும், விருப்பமும் இறைவன் எனக் களித்துள்ள இயற்கை நாட்டங்கள். மரணம் வரைக்கும் அவைகளுடன் போராடுகிறேன்.

வெளித் தவ முயற்சிகள் மட்டுமன்றி, ஆன்ம துன்பங்களும் எவுபிராசியம்மாளைத் தூய்மைப் படுத்திக் கொண்டிருந்தன. தன் ஞானத் தந்தைக்கு எழுதுகிறார் என் நேச யேசு என்னை கைவிட்டு விட்டார் எனத் தோன்றுகிறது. அதுவே என் மிகுந்த துன்பத்துக்கும் துயரத்துக்கும் காரணம். என் இதயத்தின் ஏக நண்பனை எப்போது திரும்பப் பெறுவேன். இறையன்பினால் பற்றியெரியும் ஒரு ஆன்மாவின் கூக்குரல் இது. முழு இதயத்துடன் இறைவனை அன்பு செய்தார். அந்த அன்புக்காகத் துன்புற ஆவல் கொண்டார். நேசிக்குமளவுக்கு சகித்தலும் சகிக்குமளவுக்கு நேசமும் வளருவதை உணர்ந்தார். ஏதாவது பாடுபடாத

நாள் வீணானது, ஏதாவது ஒரு சிலுவையை தந்தை மன்றாடிப் பெற்றுத் தர வேண்டும் என்று கெஞ்சுமளவுக்கு அவருடைய அன்பு நாளடைவில் ஆழமடைந்தது.

அன்பின் பாதையில் விரைந்தோட ஆவல் கொண்ட எவுபிராசியம்மாள் துன்பங்கள் வழி தன்னோடு நெருங்கி வர ஆண்டவர் தாமே வழி வகுத்தார். பலவிதமான துன்பங்கள் அவரை எதிர் கொண்டன. அவற்றுள் முக்கியமானதொன்று தன் உடன் கன்னியர்கள் கொண்ட தவறான எண்ணங்களினால் அவர் அடைந்த மனவேதனை. இதைப்பற்றிச் சுருக்கமாக மட்டுமே வெளிப்படுத்தியுள்ளார். ஒருமுறை தம் ஞானத் தந்தைக்கு இவ்வாறு எழுதுகின்றார். அன்புத் தந்தையே என் பல தவறுகளினிமித்தம் மடத்துத் தாயார் பற்றபல காரணங்களைக் கூறி என் மீது குற்றம் சாட்டி வந்தார். அவையனைத்தையும் என் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் புனிதப் பாதையில் முன்னேறும் நோக்கத்துடனும் ஒப்புக் கொடுத்து வந்தேன். அதைப் பார்க்கும் தலைவர்கள் என்மேல் அதிக வெறுப்பும் கோபமும் கொள்ளவும் பல வேளைகளில் என் மீது அதிகக் குற்றம் சாட்டவும் நேரிட்டுள்ளது. இன்னுமொரு நிகழ்ச்சியை இவ்வாறு எடுத்துரைக்கின்றனர். அன்புத் தந்தையே, சமையலறை வேலையாட்களுக்கு உதவி புரியும் பணியிலிருந்து என்னை மாற்றி விட்டனர். என் தவறுதலினிமித்தம் என எண்ணுகிறேன். தந்தையே, என்னைப் பற்றி யாரிடமும் கேட்கவும் சொல்லவும் வேண்டாம்........ இந்த வேலை எனக்கு மிகவும் விருப்பமானதாயிருந்தது. இறைவனின் உதவியால் அந்த வேலை எனக்குக் கொடுக்கப்பட்ட நாள் முதல் மிக்கக் கவனமுடன் அதைச் செய்ய முயற்சித்துள்ளேன்... யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்தத் தேவையில்லை அல்லவா.

இத்துன்பங்களனைத்தும் எவுபிராசியம்மாளை அதிகமதிகம் தூய்மைப் படுத்தக் கடவுளின் கரங்களில் கருவிகளாய் அமைந்தன. இன்னும் சில அசாதாரண வழிகளையும் இதற்கென கடவுள் பயன்படுத்தினார். நவத்துறவு காலம் முதற்கொண்டு பேயின் தொல்லைகள் தனக்கு ஏற்பட்டு வந்ததாக தம் ஞானத் தந்தைக்குத் தெரிவிக்கின்றார். தவிர பற்பல நோய்கள் மாறி மாறி அவரைத் துன்புறுத்தி வந்தன. அத்துடன் முதுமையும் சேர்ந்தபோது அவரது துன்பங்கள் அதிகரித்தன. பல வருடங்கள் தடியின் உதவியின்றி நடப்பதே கடினமாயிற்று. கடைசி நாட்களில் மறதியென்னும் குறையும் அவரை வாதித்தது. ஒன்றன் பின் ஒன்றாகத் தன்னை அண்டி வந்த சிலுவைகளைக் கண்டு அவர் அஞ்சவில்லை. அவைகளை விட்டு விலகியோடவுமில்லை. மீட்புப் பெறுவோருக்குச் சிலுவை கடவுளின் வல்லமை என்னும் இறைவாக்கு அவரில் நிறைவேறிக் கொண்டேயிருந்தது. பாடுகளின் பாதையின் வழி மகிமையின் உன்னத படிகளுக்கு அவர் உயர்த்தப்பட்டார்.



# 11. மறுவுலகிலிருந்து

புலனுக்கெட்டா உலகமொன்று நம்மைச் சூழ்ந்திருக்கிறது. ஒரு திரையினால் என்றாற் போல் அது நம் கண்களிலிருந்து மறைக்கப் பட்டிருக்கிறது. புனித ஆன்மாக்களின் வாழ்க்கையில் பலநேரம் இம்மையையும், மறுமையையும் வரையறுக்கும் மெல்லிய திரை வழிமாறுதலைக் காணலாம். இறைவன், ஆன்மா, பேய் என்றெல்லாம் கூறும்போது நாஸ்திகர் நகைப்பர். மறுப்பதனால் உண்மை மறைந்து விடுமா? மறுமையை இம்மையிலேயே கண்டும் கேட்டும் தொட்டும் உணர அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஒரு சிலருக்கு இறைவனால் அருளப்படும் தனிச் சலுகை அது. அதனால் பிறரும் பயனடைய வேண்டுமென்பதே அவரது நோக்கம்.

எவுபிராசியம்மாள் இறையன்பினால் பற்றியெரிந்தார். மரியன்னையைப் பற்றுறுதியுடன் அன்பு செய்தார். ஆத்து மாக்களுக்காகத் தன்னையே செலவழித்தார். ஆண்டவருடையவும் கன்னித் தாயுடையவும் காட்சிகள் பலமுறை அவருக்குக் கிடைத்துள்ளன எனத் தெரிய வருகிறது. அவர் தம் ஞானத் தந்தைக்கு எழுதியுள்ள கடிதங்களும், உடன் சகோதரிகள் பலரின் சாட்சியங்களும் இதற்கு இணைந்து சான்று பகிர்கின்றன. 1901 செப்டம்பர் திங்கள் 15ம் நாள் தம் ஞானத் தந்தைக்கு இவ்வாறு எழுதினார். இம்மாதம் 11ம் நாள் நற்கருணை வாங்கி நன்றி செலுத்தும் வேளையில் திடீரென மயக்கமுற்றேன். ஒருவர் என் பார்வையில் நிற்பது போல் உணர்ந்தேன். அவர் ஒரு பெரிய சிலுவையில் அறையுண்டவராய் உடல் முழுதும் இரத்தம் ஒழுகும் நிலையில் காணப்பட்டார். நினைக்கும்போது என் தந்தையே, கதறியழ வருகிறது. பின் அவர் துக்கம் மேலிட்டவராய் திருவாய் மலர்ந்தருளினார். என் மகளே நான் ஒருபோதும் ஆறுதல் அனுபவிப்பதில்லை. என் இதயம் இடைவிடாமல் வருத்த முற்றிருக்கிறது. நீ என்னை நினைத்து ஆறுதல் கூற வேண்டும்.

திருப்பலியில் பங்கு பெற முடியாத நாட்களில், குறிப்பாக தவக் காலத்தில் பல தருணங்களில் தமது அறையில் புதுமையாக திருப்பலியில் பங்கு பெறவும் திவ்விய நன்மை வாங்கவும் முடிந்துள்ளதாக எவுபிராசியம்மாள் கூறியுள்ளார். கன்னித் தாயின் காட்சி பல தருணங்களில் இவருக்குக் கிடைத்துள்ளது. ஒல்லூர் மடத்தின் நாட்குறிப்பேட்டில் குறிப்பிடப் பட்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியாவது. 1906 ஆகஸ்ட் 15ம் நாள் அன்னையின் விண்ணேற்பு விழாவன்று காலையில் நடந்த நிகழ்ச்சியொன்று குழு முழுவதையும் ஆழமாகத் தொட்டது. அன்றைய தினம் திவ்விய நற்கருணை பெற்று சிறிது நேரத்துக்குள் எவுபிராசியம்மாள் உத்தரவு பெற்றுச் சொந்த அறைக்குப் போனார். சிறிது நேரத்துக்குப் பின் மடத்துத் தாயார் அவரது அறைக்குச் சென்றார்.

அப்போது எவுபிராசியம்மாள் மயக்கமுற்றிருப்பதையும் கன்னித்தாயின் பெயரால் பேசுகிறதையும் கண்டார்.

தான் தேவதாய் என்றுரைத்துத் தாயாருக்குத் தனியாகவும் குழுவுக்குப் பொதுவாகவும் சில புத்திமதிகளைக் கூறினார். எவுபிராசியம்மாளை மிகவும் கண்டித்துச் சிறுமைப்படுத்த வேண்டுமென்றும் அப்படிச் செய்வதில் வருத்தப்பட வேண்டாமென்றும் குறிப்பிட்டுக் கூறினார். தாயார் குழு முழுவதையும் அறைக்குள் வரவழைத்தார். அவர்களுடன் மடத்தாரின் ஆத்தும குருவும் வந்தார். அனைவரும் சேர்ந்து புனிதரனைவரின் பிரார்த்தனை சொல்லினர். பிறகு தாயாரும் ஆத்தும குருவும் தவிர மற்றனைவரும் அறையை விட்டுப் போகும்படி அக்குரல் கற்பித்தது. எவுபிராசியம்மாளிடம் நடந்துக் கொள்ள வேண்டிய முறையைப் பற்றி தாயாரிடம் முன்பு கூறியவற்றை ஆத்தும குருவிடமும் எடுத்துரைத்தார். அந்நேரம் ஆயர் மார் மேனாச்சேரி ஆண்டகையும் அங்கே வரலானார். ஆண்டகையிடம் அக்குரல் சில தனி விஷயங்களை எடுத்துரைத்தது. பத்து மணியளவில் காட்சி முடிந்து எவுபிராசியம்மாள் தன்னுணர்வு பெற்றார்.

ஆண்டவருடையவும் கன்னித் தாயுடையவும் காட்சி பல முறை தனக்குக் கிடைத்த போதிலும், இம்மாதிரி காட்சிகள் பெற எவுபிராசியம்மாள் ஒருபோதும் விரும்பினவரல்லர். தம் ஞானத் தந்தைக்கு எழுதுகின்றார். நேசத் தந்தையே என் புத்தியுணர்வு அகன்று போகின்றதைத் தொடர்ந்து நெருக்கடிகள் பல ஏற்படுகின்றன. காட்சிகள் எதுவும் எனக்கு வேண்டாம். இறை ஐக்கியத்தில் நிலைத்திருப்பது மட்டும் போதும். பிறருக்குத் தெரியக் கூடிய இயற்கைக்கு மேற்பட்ட எந்நிகழ்ச்சியும் மரணம் வரைக்கும் எனக்கு வேண்டாமென மன்றாடுகின்றேன். தனக்குக் கிடைக்கும் காட்சிகள், வெளிப்பாடுகளைப் பற்றி அகங்காரங்கொள்ளவோ, அவையனைத்தும் இறைவனிடமிருந்து வரும் காட்சிகளென்று பிடிவாதம் கொள்ளவோ செய்யவில்லை. அனைத்தையும் ஆன்ம குருவுக்கு வெளிப்படுத்தி ஒருவேளை அவையனைத்தும் மனத்தின் தோற்றங்களே என்று கூறி ஆன்ம குருவின் தீர்வுக்கு விட்டு விட்டார்.

எவுபிராசியம்மாளைப் புனிதத்தில் வளர, பேய்களின் வெளிப்படைத் தொல்லைகளையும் இறைவன் கருவியாகப் பயன்படுத்தினார். நவத்துறவு காலம் முதற்கொண்டே இத்தொல்லைகளைப் பட்டு அனுபவித்து வந்தார். இதைப் பற்றி ஆயரவர்களுக்கு இவ்வாறு எழுதினார். அன்புத் தந்தையே, நான் அம்பழக்காட்டு மடத்தில் நவத்துறவியாயிருந்த போது பேய்கள் என்னை மிகவும் கொடுமைப்படுத்தின. அந்த துஷ்ட ஓநாய்கள் நான் சபையை விட்டு போக வேண்டுமென வற்புறுத்தி பல வேளைகளில் என்னை அடைக்கவும், இரவில் படுக்கையோடு இழுக்கவும் கீழே தள்ளவும் செய்திருக்கின்றன. நீ ஒரு நோயாளி. உதவாக்கரை என்பதால் யாருக்கும் உன்னை விருப்பமில்லை. இங்கே உன்னைக் கவனிக்க மாட்டார்கள். உன் தந்தை இறந்த பின் வீட்டுக்குச் சென்றால் யாரும் உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆதலால் இப்போதே போய் விடுவது நலம் என்றெல்லாம் அறிவுரை கூறுவதுண்டு. நான் போக மாட்டேன். அனைவரும் என்னைக் கைவிட்ட போதிலும் இயேசுவும் அன்னையும் என்னைக் கைவிடமாட்டார்கள் என்று பதிலுரைப்பேன். இதைக்கேட்டு இன்னும் அதிகம் கோபம் கொண்டன.

ஒருநாள் பொது நிகழ்ச்சி என்னைப் போக விடாமல், மாடி யிலிருந்து நான் கீழே வரும் வழியில் படிக்கட்டின் வாயிலை பெரிய ஒரு மரத் துண்டினால் அடைத்து விட்டன. இதற்கு முன் இப்படி நடக்கும்போது சிலுவை அடையாளம் வரைந்தால் திறக்கப் பட்டிருக்கும் ஆனால் அன்று அப்படிச் செய்தும் அவை திறக்கவில்லை. குழுவில் என்னைக் காணாமையால் பலர் வந்து என்னை அழைத்தனர். பேய்களோ, நீ மடத்தை விட்டுப் போவாய் என்று வாக்களித்தால் மட்டும் உம்மைப் போக விடுவோம் என்று கூறித் துன்புறுத்தின. தந்தையே, நான் மிகவும் அல்லல்படுகிறேன். சபையை விட்டுப் போகலாம் என்றெண்ணினேன். இறுதியில் எப்படியாவது படியிறங்க வேண்டும் என்ற கருத்துடன், தேவத்தாயின் உதவியை மன்றாடி, என்னைப் போகவிடும், உங்கள் விருப்பத்துக்கு ஒத்துக் கொள்வேன் என்று கூறினேன். உடனே மகிழ்ச்சியோடு என்னை இறங்க விட்டன. இரண்டாம் மாடியை அடைந்ததும் பக்கத்து அறைக்குள் குதித்தேன். இவள் நம்மை ஏமாற்றி விட்டாள் என்று என்னைப் பிடித்து இழுக்க முயன்றன. திடீரென அழகுமிக்க ஓர் கன்னிகை என்னருகில் தோன்றி இவளை விட்டு விடுங்கள் எனக் கூறினதும் பேய்கள் ஓடி மறைந்தன. அந்த அம்மாள் மிக்க அன்புடன், மகளே ஏன் இவ்வளவு கலக்கமுறுகிறாய்? உனக்குத் துணையாக நானில்லையா? உன்னைக் கைவிட மாட்டேன், ஏன் அவைகளுக்கு அவ்வாறு வாக்களித்தாய்? இனிமேல் இங்ஙனம் செய்யாதே. உன் இதயத்திலுள்ளதை அவைகளால் கண்டு பிடிக்க முடியாது. அதை நானும் உன் நல்ல யேசுவும் மட்டும் அறிவோம். இனிமேல் அவைகள்; என்ன செய்தாலும் கலக்கமுற வேண்டாம். அவைகளின் விருப்பத்திற்கிணங்கி ஒரு வார்த்தையும் சொல்ல வேண்டாம்... அனைத்திலும் திடனும் நம்பிக்கையும் கொண்டிரு....இவ்விஷயங்களை யாருக்கும் நீ சொல்லாவிடில் சபை யிலிருந்து தள்ளிவிடப் படக்கூடும். ஆன்ம குருவுக்கும் தலைவிக்கும் தெரிவிக்கவும், திடன் கொண்டிரு என்று கூறி நவத்துறவு தலைவியின் அறைப் பக்கம் என்னை கூட்டி விட்டு மறைந்துப் போனார்.

பேய்களின் தொல்லைகள் பிற காலத்திலும் எவுபிராசியம்மாளுக்கு ஏற்பட்டுள்ளதை உடன் கன்னியர் பலர் கவனித்திருக்கின்றனர். இதைப் பற்றி ஒரு சகோதரி கூறுகின்றார். ஐந்து வருடக்காலம் நான்

எவுபிராசியம்மாளுடன் மடத்தில் வாழ்ந்துள்ளேன்.... சில விசேஷ விழாக்களின் நவநாட்களில் அவருடைய அறையில் பேய்களின் தொல்லைகள் மிகுந்திருந்தன. நாங்கள் கேட்கும் விதம் பேய்கள் அவரை அடிக்கவும் உதைக்கவும் செய்தன. இரவு நேரங்களில் இப்படி நடந்து வந்ததனால் நவத்துறவிகளாகிய நாங்கள் பயந்து நடுங்கி ஒருவர் ஒருவருடைய கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்போம். மறுநாள் தாயார் எங்களிடம் வரும்போது அவர் மிகுந்த கஸ்தி வேதனை அனுபவிப்பதாக உணர்ந்திருக்கிறோம். ஆயினும் ஒன்றும் நடக்காதது போல் எங்களுடன் பொழுது போக்கில் பங்கு கொள்ளுவார். கோவிலில் பேய் எவுபிராசியம்மாளை கீழேத் தள்ளிவிடுவதையும் அவர் மீது கல் எறிவதையும் பிறர் கவனித்திருக்கின்றனர். அவரைக் கட்டுவதற்குப் பயன்படுத்தும் கயிற்றையும் அவர் மீது எறியப்பட்ட கற்களையும் பக்கத் திலிருக்கும் சகோதரிகள் கண்டிருக்கிறார்கள். எவுபிராசியம்மாளின் செப உதவியை நாடி வருபவர்கள் மறுவுலகிலிருந்து வரும் ஆன்மாக்களும் இருந்தனர். உத்தரிக்கும் ஆன்மாக்களும் இருந்தனர். உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காகச் செபித்தல் அவருடைய சிறந்த ஒரு பக்தி முயற்சி. அவர் செபிக்கும்போது உத்தரிக்கும் ஆன்மாக்கள் அவர் பக்கத்தில் காத்து நிற்பர்.

மிகவும் கவனத்துக்குரிய காட்சி பியாட்லீஜீஸ் தாயாருடையது. ஒல்லூர் மடம் துவங்கினவர்களுள் ஒருவர் இவர். சில வருடகாலம் அம்மடத்துத் தலைவியாகப் பணி புரிந்தார். துறவற ஒழுக்கத்திலும் இறை நம்பிக்கையிலும் சிறந்து விளங்கினவர். 1906 டிசம்பர் 20 ம் நாள் தனது 39 ம் வயதில் அவர் பரகதியடைந்தார். அவரது பிரிவு எவுபிராசியம்மாளை மிகுந்த வருத்தத்துக்குள்ளாக்கியது. சில நாட்கள் கழிந்தன. எவுபிராசியம்மாளே கூறுகின்றார். இரவு பன்னிரெண்டு மணி கதவைத் தட்டும் சத்தத்தையும் அழுகைக் குரலையும் கேட்டேன். நடுங்கிக் கொண்டு எழுந்தேன். படுக்கையறையில் ஒருவர் நிற்கின்றார் பயப்படாதே, நான் யேசுவின் பியாட்லீஜீஸ் சகோதரி நீதியுள்ள இறைவன் என்னை உத்தரிக்கும் இடத்திற்கு அனுப்பியுள்ளார். கொடிய வேதனை அனுபவிக்கிறேன் உங்கள் சகோதரியாம் என்மேல் இரக்கமாயிரும் என்று வந்து நின்றவர் கூறினார். தொடர்ந்து அழுது கொண்டே நின்றார். என்ன செய்வதென எனக்குத் தெரியவில்லை. என்னைப் பார்த்து மீண்டும் கூறினார். நான் பியாட்லீஜீஸ் சகோதரி தான். இரக்கமுள்ள இறைவனின் அனுமதியுடன் உத்தரிக்குமிடத்திலிருந்து வந்துள்ளேன். என்னைக் கட்டியிருக்கும் சங்கிலியைக் காட்டுகிறேன், என்று கூறி சங்கிலியை என் கையில் வைத்தார். தாங்க முடியாத வெப்பம் கையை உதறினேன். எனக்காக மன்றாடவும், பிறரையும் மன்றாடக் கேட்கவும், என்று இரங்கி கேட்டார். என்னால் ஆனதெல்லாம் செய்கிறேன் என வாக்களித்தேன். நான் போகிறேன் என்று கூறி மறைந்து போனார்.



இதைப்பற்றி எவுபிராசியம்மாள் ஆயருக்கு இவ்வாறு எழுதினார். இரவில் எனக்கு மிகுந்த பயம், தினமும் கதவில் தட்டும் சத்தம் நேற்று மடத்துத் தாயாரும் அறையில் படுக்கச் சொன்னார். தாயாரும் சகோதரி ஆஞ்ஞேசும் நானும் அங்கேயே படுத்திருந்தோம். தாயார் சில விஷயங்கள் கேட்டறிய விரும்பினார். நடு இரவில் வழக்கம் போல் தட்டும் சத்தம். தாயார் தீர்த்தம் தெளித்தார். பின் கேள்விகள் கேட்கலானார். ஏன் இப்படி வருகின்றீர், நான் செபிக்கிறேனே என்று கேட்டபோது கிடைத்த பதிலாவது, இறைவனுடையவும் திருத்தாயாருடையவும் மாபெரும் அருளால் பன்னிரெண்டு நாட்கள் தொடர்பாக வந்து மன்றாடும்படி கேட்கக் கற்பித்துள்ளார் ஆதலால் இவ்வாறு வருகிறேன். எந்த குற்றத்திற்காக நீங்கள் உத்தரிக்க வேண்டியுள்ளது என தாயார் கேட்டபோது ஆன்மா கொடுத்த பதிலாவது, நான் மனது பொருந்தி ஏழ்மைக்கு மாறாக நடந்துக் கொண்டேன். என் கடமைகளை ஆர்வமின்றிச் செய்தேன். சிலவற்றை அற்பமென்று விட்டு விடவும் செய்தேன். ஆதலால் தான் துன்புறுகிறேன். நீங்களும் இம்மாதிரி குற்றங்களில் விழாதபடி இறைவனுடையவும் திருத்தாயாருடையவும் இரக்கத்தால் தெரிவிக்கிறேன். வாழ் நாட்களில் அற்பமென்று கருதப்படும் குற்றங்களுக்கு இறைவனின் திருமுன் மிகவும் கடுமையாக உத்தரிக்க வேண்டியுள்ளது. எத்தனை ஆண்டுகள் தண்டனை நீடிக்கும் என்று தாயார் மீண்டும் கேட்டபோது, இன்னும் சில மாதங்கள் மட்டும் என்று பதிலுரைத்தார். வேறு சில கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை. இறுதியில், நான் பியாட்லீஜீஸ், இறந்து போன உங்கள் சகோதரியே, என்று கூறி மறைந்து போனார்.

## 12. மரித்தாலும் மறக்கமாட்டேன்

எவுபிராசியம்மாள் 13 ஆண்டுகள் நவத்துறவிகளின் தலைவியாகவும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ஒல்லூர் கன்னியர் இல்லத் தலைவியாகவும் பணியாற்றின பின் பொறுப்பான வேலைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. அவரது எஞ்சின வாழ்நாள் முழுதும் உடல் நலக் குறைவினாலும் பல்வேறு நோய்களினாலும் பாதிக்கப்பட்டார். ஆயினும் அவரது ஆர்வமிக்க செப வாழ்க்கையையும், கடும் தவத்தையும், எளிய செயல்களால் பிறருக்குப் பணி புரிவதையும் எவ்விதத்திலும் தளர்த்தினவரல்லர். சத்தம் சந்தடியெதுவுமின்றி தன் செபத்தாலும், ஆறுதல் மொழிகளாலும் சிறு சிறு அன்புப் பணிகளாலும் பிறருக்கு ஆன்ம உடலுதவிகளைப் புரிவதில் அதிகமதிகம் ஆர்வம் காட்டி வந்தார். தள்ளாடும் முதிர் வயதிலும் இந்த ஆர்வம் குன்றவில்லை. அவர்கள் இறப்பதற்கு சில ஆண்டுகள் முன், தானாக நடப்பதற்கு

தடியின் உதவி தேவைப்பட்டது. நடக்கும்போது சத்தம் உண்டாக்கி, பிறருக்குத் தொல்லை வருவிக்காத தடியின் நுனியில் துணி சுற்றிக் கட்டுவார். ஒரு கையில் ஊன்றுகோல், மறுமையில் செபமாலை, தலைகுனிந்து ஆயினும் மலர்ந்த முகத்துடன் உதடுகளில் செபம் தவழ, துன்பங்கள் நோய்கள் நடுவிலும் எவ்வித முறைப்பாடுமின்றி அமைதியின் உருவம் போல யாருக்கு உதவி புரியலாம் என்னும் ஆவலுடன் மடத்திற்குள் சுற்றி வரும் அம்மையாரைப் பார்ப்போர் அனைவரும் அறியாமலேஅவரால் இறைப்பிரசன்ன உணர்வுக்கு ஈர்க்கப்படலாயினர். தன் இறுதி நாள் அண்மையில் வருவதை உணர்ந்த எவுபிராசியம்மாள் அதற்கென தம்மைத் தயாரித்து வந்தார். தாழ்ச்சியுடன் பிறருடைய செப உதவியையும் தேடுவார். இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் மட்டும் அவர் படுக்கையை நாட வேண்டியதாயிற்று.

1952 ஆகஸ்ட் 26 ம் நாள் பிற்பகல் அப்போது நவத்துறவு தலைவராகப் பணிபுரிந்து வந்த தவத்திரு லூசிசு சுவாமியிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றார். எவுபிராசியம்மாளுக்கு அப்போது சிறிது புத்தித் தடுமாற்றம் இருப்பதாக் குருவானவர் கண்டுகொண்டார். ஒரு சகோதரியின் உதவியுடன் அவர் நோயாளி அறைக்கு அனுப்பப்பட்டார். அங்கே செல்வதற்குள் மிகவும் சோர்வுற்ற நிலையிலானார். உடல் ஒரு பக்கம் தளர்ந்து போனது. பேச முடியாத நிலையில் கிடந்தார். ஆயினும் அவர் இறக்கும் நேரத்தை நெருங்கி விட்டார் என யாரும் நினைக்கவில்லை.

மறுநாள் காலையில் என்னவோ கூறினார். யாருக்கும் புரியவில்லை. கைகளினால் சைகை காட்டிக் கொண்டிருந்தார். அவரைக் கண்காணிக்கும் சகோதரி காகிதமும் பென்சிலும் கொடுத்து எழுதிக் காட்டும்படி கேட்டுக் கொண்டார். நடுங்கும் கரத்தால் மிகவும் சிரமப்பட்டு எனக்கு நோயில் பூசுதல் கொடுங்கள் என எழுதி வைத்தார். அதுவும் அளிக்கப்பட்டது. மூன்று நாட்கள் படுத்த வண்ணமாகக் கிடந்தார். வாழ்நாள் முழுதும் இரவும் பகலும் செபமாலை ஏற்றிப்பழகின அவரது கரங்களில் இறுதி நிமிடம் வரையிலும் அது தவழ்ந்துக் கொண்டே யிருந்தது. இதயத்தை இறைவன் பக்கம் திருப்பினவராய், தன்னைப் பார்க்க வந்தவர்களையும் இறைவன் பக்கம் திருப்பவல்ல ஒரு திவ்விய ஒளி அவரது முகத்தில் தோன்றியது.

எவுபிராசியம்மாளின் நோய் விவரம் கேட்டறிந்த சகோதரிகள் பிற மடங்களிலிருந்தும் விரைந்து வந்தனர். தங்களுக்காகச் செபிக்கின்ற தாயார் இறக்கப் போவதை அறிய வந்த மக்களும் அவரது இறுதி ஆசீர் பெறும் நோக்கத்துடன் கூட்டம் கூட்டமாக ஓடோடி வந்தனர். அவ்வேளையில் அங்கே கூடியிருந்த சகோதரிகளிலொருவர் எவுபிராசியம்மாளின் கடைசி நிமிடங்களை இவ்வாறு விவரிக்கின்றார்.



எவுபிராசியம்மாள் இறக்கும் நாள் பிற்பகல் ஐந்து மணிக்கு நான் ஒல்லூர் மடத்துக்கு வந்தேன். அவரது அருகில் நின்று தேவையான உதவிகளைச் செய்துக் கொண்டிருந்தேன். முகத்தில் சிறு மாற்றங்கள் தென்படலாயின. சுவாசத்தின் வேகம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. பின் அது குறைந்தது. இறுதியில் நின்று விட்டது. அவரது கண்களை மூடும்படி கேட்டுக் கொண்டார். பார்க்கும்போது கண்மணிகள் அசைந்து கொண்டிருந்ததைக் கவனித்தேன். சற்றுப் பின் கண்களில் நீர் நிரம்பிற்று. ஒரு கைக்குட்டையால் அதை துடைத்தெடுத்தேன். அசைவு நின்றது. கண்களும் மூடின. மடத்தின் ஞானத்தந்தையும் சகோதரிகளும் அன்பர்களும் சுழ்ந்து நிற்க, 1952 ஆகஸ்டு திங்கள் 29ஆம் நாள் இரவு 8.40 மணிக்கு எவுபிராசியம்மாள் இறைவனடி சேர்ந்தார்.

மறுநாள் பிற்பகல் மடத்தின் பக்கத்திலுள்ள கெபி யருகிலிருக்கும் கல்லறையொன்றில் திரளான மக்கள் முன்னிலையில் அவரது பூத உடல் அடக்கம் செய்யப்பட்டது. வந்தவர்கள் வீடு திரும்பும் போது, எவுபிராசியம்மாள் உயிரோடிருக்கையில் அடிக்கடி கூறி வந்த மரித்தாலும் மறக்க மாட்டேன் என்னும் வார்த்தைகள் தங்கள் காதுகளில் எதிரொலிப்பதைக் கேட்டுக் கொண்டே திரும்பினர்.

அந்த எதிரொலியோ வெறும் ஒலி மட்டுமாக முடியவில்லை. எவுபிராசியம்மாளின் செப உதவியை நாடி மக்கள் அவரது கல்லறைக்கு வரத் துவங்கினர். தாம் கூறின வார்த்தைகளை இன்று அவர் உண்மையாகவே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். வெவ்வேறு நிலை யிலுள்ள ஆட்கள் பல்வேறு நன்மைகளை எவுபிராசியம்மாளின் உதவியால் அடைந்திருப்பதாக சாட்சி கூறுகின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்கள், வேலை கிடைத்தவர்கள், காணாமற்போன பொருட்களைத் திரும்பப் பெற்றவர்கள், பண நெருக்கடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், நீண்ட காலமாக நடவாமலிருந்த திருமணம் விரைவில் செய்ய முடிந்தவர்கள், பிறப்பிலே ஊமையும் முடவருமாயிருந்து பேசவும் நடக்கவும் ஆற்றல் பெற்றவர்கள், மழை கிடைத்தவர்கள், புற்று நோய் போன்ற கொடிய நோய்களிலிருந்து குணமடைந்தவர்கள். உயிராபத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள், குடும்பத்தில் பிணக்கு வெறுப்புகள் நீங்கி சமாதானமானவர்கள், தவறான வழி விட்டு மனந்திரும்பினவர்கள் போன்றவர்கள் அவர்களுள் சிலர்.

அவர்களுள் ஒருவரான திருமதி கொச்சு திரேஸ் தன் அனுபவத்தை எடுத்துரைக்கின்றார். என் காலில் பெரியதோர் புண் வந்து சீழ் வடிந்து தாங்க முடியாத வலியால் துன்புற்றுக் கொண்டிருந்தேன். ஒருமுறை சிறிது மயங்கினேன். ஒல்லூர் மடத்துக் கெபியையும் அதற்கு முன் எவுபிராசியம்மாளின் கல்லறையையும் கண்முன் கண்டேன். சிறுவயதில் ஒல்லூர் தூய மரியன்னையின் பள்ளியில் நான், மாணவியாயிருந்த

போது எவுபிராசியம்மாளுக்கு ஏதாவது சிறு உதவி செய்யும்போதும், மரித்தாலும் மறக்க மாட்டேன் என்று என்னிடம் அவர் கூறுவது வழக்கம். அம்மையாரின் கல்லறையைக் கண்முன் கண்டதும், மரித்தாலும் மறக்க மாட்டேன் என்று கூறியுள்ள நீங்கள், என் காலின் வலி காண்கிறதில்லையா என்று கோபமும், வருத்தமும் கலந்த குரலில் கேட்டேன். என் தம்பியின் மனைவி லீலாம்மா என் பக்கத்தில் அமர்ந்திருந்து எனக்கு உதவி புரிந்து கொண்டிருந்தாள். வலி மிகுதியினால் எனக்கு ஞாபகக் குறைவு ஏற்பட்டிருந்தது. மயக்கத்தில் என்னவோ உளறியிருப்பதாக எண்ணி என்னை எழுப்பினாள். எழுந்து சிறிது காப்பி அருந்தினேன். அவருடைய உதவியுடன் எழுந்து நின்றேன். என் காலைத் தொட்டுப் பார்த்தபோது ஆச்சரியமடைந்தேன். எவுபிராசியம்மாள் என் வலியை அகற்றி விட்டார் என்று லீலாம்மாவிடம் கூறினேன். மகிழ்ச்சியுடன் இறைவனுக்கு நன்றி கூறினோம். அதன்பின் அந்த வலி ஒருபோதும் திரும்பி வந்ததில்லை.

எவுபிராசியம்மாள் தம் நண்பர்களை மறக்கவில்லை. அவர்களுக் காகவும் தம்மை அண்டி வருவோர் அனைவருக்காகவும் செபித்துக் கொண்டேயிருக்கின்றார். இன்றும் அவர் செபிக்கின்ற தாயார். ✠

# செபிக்கின்ற தாயார்



....இனி அவர் உயிர் பிழைக்க மாட்டாள் என்று உறுதியாக எண்ணி கன்னியர்கள் அவளது படுக்கையைச் சூழ்ந்து நின்றனர். அவளை உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தனர். திடீரென ஒரு மாற்றம். ஆச்சரியம் மேலிட்டவர்களாய் கூர்ந்து கவனித்தனர் கன்னியர்கள். ரோசாவின் முகம் மலர்ந்தது. ஒளி வீசிற்று. யாரையோ உற்றுப் பார்ப்பது போல் யாருடனோ பேசுவது போல் காட்சியளித்தாள்.

முகத்தில் ஓர் அமைதி. யாரையோ வரவேற்பது போல் கரங்களை நீட்டினாள். அனைத்தும் நோயின் விளைவுகளென எண்ணினர் பார்த்து நின்ற கன்னி யர்கள். ஆனால் வேறென்னவோ என விரைவில் உணரத் தொடங்கினர், சில மணி நேரங்களுக்குள் ரோசா குணமடைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஒரு சில நாட்களுக்குள் குணமடைந்து படுக்கையை விட்டெழும்பினாள். முற்றிலும் குணம் பெற்றாள். கன்னியர்கள் அவளிடம் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர். புன்னகையுடன் தப்பி மாறினாள் ரோசா. ஆனால் மடத்துத் தலைவி ஆக்னேசம் தாயார் முன் மௌனம் சாதிக்க முடியவில்லை. திருக்குடும்பம் தனக்குக் காட்சியளித்ததும், தான் ஒரு கன்னிகையாக பல ஆண்டுகள் சபையில் வாழ்ந்த பின் தான் இறப்பாள் என தனக்கு அறிவிக்கப்பட்டதையும் தாழ்மையுடனும், நேர்மையுடனும் வெளிப் படுத்தினாள்.

தொகுப்பு மற்றும் வெளியீடு:
சி.எம்.சி அருட்சகோதரிகள்,
தக்கலை மறைமாவட்டம்

நூல் வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர்:

புலரி ஆப்செட் அச்சகம், தக்கலை.
போண்: 04651 252570